# தவறுகள்



ரஜனி குஹநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுகள்

(குறுநாவல்)

'ரஜனி' குஹநாதன்

ரஜனி பதிப்பகம்
கொழும்பு — பாரிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© உரிமை பதிவு

தை 1991

விலை : ரூ. 20

★ THAVARUKAL - A NOVEL BY RAJANI KUHANATHAN ★ FIRST EDITION: JANUARY 1991 ★ E.S.S. KUHANATHAN, 100, RUE DE CLERY, PARIS-2. ★ ©PUBLISHED BY:RAJANI PUBLICATIONS. COLOMBO-5. SRI LANKA.
★ PRINTED AT KAANTHALAKAM, MADRAS-600 002. INDIA.

அச்சிடல்: காந்தளகம், 834 அண்ணாசாலை, சென்னை-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயை,
கட்டிய மனைவியை,
ஏன், தன் பிள்ளை,
சகோதரர்களை விட-
எழுத்தையே
அதிகமாய் நேசித்தவன்,
என் இனிய சகோதரனுக்கு!

— சமர்ப்பணம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை பிறந்த கதை

பத்திரிகையாளன் என்றால் தான் கண்ட - அல்லது கேட்ட செய்தி ஒன்றை எழுதுபவன் என்றுதான் பொது வான கருத்து நம்பவர்கள் மத்தியில் நிலவிவருகிறது.

பத்திரிகையாளனால் சிருஷ்டி இலக்கியங்களை படைக்க முடியாது என்ற இந்தக் கருத்தை தகர்த்து எறிந்த பத்திரிகையாளர்கள் நம்மத்தியில் இல்லாம லில்லை.

முருகபூபதி, ஈ.கே. ராஜகோபால் போன்றவர் களை இந்த வரிசையில் குறிப்பிடலாம்.

முழுநேர பத்திரிகையாளனாக அதுவும் செய்தித் துறையில் செய்திகளை எழுதி - திருத்தி மட்டுமே பழகிப்போன என்போன்றவர்கள் எதை எழுதினாலும் அதில் 'செய்தி'யின் தாக்கம் ஏற்படுவதைத் தடுக்க முடியுமோ தெரியவில்லை.

எண்பத்திநான்கின் ஆரம்பப்பகுதி என்று நினைக் கிறேன்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொள்ள வந்திருந்த தினகரன் பிரதம ஆசிரியர், எனது மதிப்பிற்குரியவர் திரு. ஆர். சிவகுருநாதனைச் சந்தித்தேன்.

''தம்பி... தினகரனுக்கும் ஏதும் எழுதுமன்...'' என் றார்.

நானும் சம்மதம் என்பதுபோல் சிரிக்க... ''ஒரு நல்ல நாவல் ஒண்டு எழுதும்..'' என்று முடித்தார்.

எப்போதும் நகைச்சுவையாகவே பேசுபவர் அவர்.

இந்த வேண்டுதலும் அந்தப்பாணிதான் என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில்-

ஒரு சிறுகதையைத்தானும் அதற்கு முதலில் எழுதி யறியாத என்னிடம் நாவல் எழுதுமாறு அவர் கேட்டது என்னை அப்படித்தான் எண்ணத்தோன்றியது.

சிலமாதங்கள்தான் சென்றிருக்கும்-

மீண்டும் அவரைச் சந்தித்தேன். அப்போதும் அவர் விடவில்லை. அதே கேள்வியைத்தான் மீண்டும் கேட் டார். என்னுள் ஒருவகை உத்வேகம்!

நான் நினைத்தால் நாவல்கூட எழுதலாம் என்று அவர் நம்புகிறார் போலும் - அவருக்காக - அவர் என் மீது கொண்டுள்ள அபிப்பிராயத்தை மெய்யாக்கவா வது எழுதவேண்டும் என்று தீர்மானித்தேன். அன்று மாலையே எழுதவும் ஆரம்பித்துவிட்டேன்.

நான் முதன்முதலாய் எழுதிய இந்த நாவல் 'தின கரன்' பத்திரிகையில் வெளிவந்தபோது ஒவ்வொரு அத்தியாயத்தையும் படித்துவிட்டு அலுவலகம் தேடி வந்து விமர்சித்து-நெறிப்படுத்தியவர் எமது மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர்.

என்னை பத்திரிகைத் துறையில் கால் பதிக்க உதவி யவர் — இன்றும் என்னை அன்புடன் நெறிப்படுத்து பவர் பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன்.

மூவரும் என் நன்றிக்குரியவர்கள்.

நூலை அழகுற அச்சிட்டு உதவிய 'காந்தளகம்' திரு. க. சச்சிதானந்தன், ஊழியர்கள், அட்டைப்படத்தை அழகுற அமைத்துத்தந்த ஒவியர் லங்கா அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாரந்தனைதெற்கு — ரஜனி குஹநாதன்
பாரிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (1)

பாடசாலைக் கட்டிடமே அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது.

மாணவர்கள் மத்தியில் ஒரே பரபரப்பு. இன்னும் சில நிமிடங்களில் தபாற்காரன் வந்துவிடப் போகிறான் என்பதை நினைத்துப் பார்த்தபோது அந்த மாணவர்களுக்கு மூச்சு வாங்கியது.

மாணவர்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகின்ற பரீட்சை முடிவுகள் அன்று வெளியாக விருந்தன.

பரீட்சையில் சித்தியடைந்தால் சக நண்பர்களை (மாணவிகளைத்தான்) பிரிய நேரிடப் போகிறதே என்று ஏங்கும் மாணவர்கள் ஒரு புறம்.

தங்கள் அன்புக்குரியவள் தன்னிலும் கூடிய பெறு பேறுகளைப் பெற்றுவிடுவாளோ என்று ஏங்கும் மாணவர்கள் ஒரு புறம்-

பரீட்சை முடிவுகள் வெளியாகுவது பற்றியே சிந்திக்காத மாணவர் கூட்டம் மறுபுறம்-

இப்படியாக பாடசாலை எங்கும் ஒரே கலகலப்பாக இருந்தது.

வழக்கம் போல விசிலை ஊதி, குசினிக்குள் இருந்து வீட்டுக்காரர் வரும் வரை படலையடியில் காத்து நிற்கும் தபால்காரனுக்கு அன்று சிரமமிருக்கவில்லை. ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் அவனையே எதிர்பார்த்து காத்து நின்றது ஒவ்வொரு கூட்டம்.

ஆனாலும் எப்போதுமே போயிராத வீடுகளுக்கெல்லாம் அன்று செல்லவேண்டியிருந்தது. தபால் நிலையத்தை விட்டு வெளியேறும் போதும் ஒரு கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைச் சூழ்ந்து நீண்ட நேரம் ரகளை பண்ணிவிட்டிருந்ததால் வழக்கமான நேரத்தில் தபால்காரனால் பாடசாலைக்கு வரமுடியவில்லை.

மாணவர்கள் பொறுமையிழந்து காணப்பட்டனர். உயர் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பரீட்சை முடிவு வராதா? என்று மனதுள் குதூகலித்தவாறு சிறிய வகுப்பு மாணவர்கள் தமக்குகிடைத்த அந்த ''சுதந்திரத்தை'' அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

பாடசாலையில் எந்தவொரு வகுப்புக்குமே அன்று பாடம் நடக்கவில்லை. விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் தத்தமக்குப் பிடித்தமான விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர். ஆசிரியர்களுக்கும் குதூகலத்துக்கு குறைவில்லை. அவர்களும் குழுக்குழுக்களாக கூடி நின்று பல்வேறுபட்ட நியாயங்களிலும் ஈடுபட்டிருந்தனர். உயர் வகுப்புக்கு படிப்பிக்கும் ஆசிரியர்கள் மட்டும் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தாம் படிப்பிக்கும் பாடங்களில் கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்தால் தமக்குப் பெருமை என்பதாலேயே அவர்கள் முடிவுகளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

சில ஆசிரியைகள் பாடசாலைக்கு மிக அருகேயுள்ள தமது வீடுகளுக்கும் சென்று வந்தனர். பாடசாலைக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள்தான் அங்கு கூடுதலாகப் படிப்பித்து வந்தனர்.

பாடசாலையில் இப்படியேதும் சம்பவமென்றால் அவர்கள் பாடு வெகு குஷி. பாடசாலையின் தெற்கு வேலிதான் தங்கம்மா ரீச்சரின் வீட்டு வடக்குவேலி. படலையைத் திறந்தால் பள்ளிக் கூடமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அந்த வேலியிலும் ஒரு சிறு தட்டிப்படலை வைத்திருந்தார்.

இந்த சுகத்தை அனுபவிப்பதற்காகத்தானே இருபது வருடங்களாக இந்தப் பாடசாலையிலேயே இருந்து வருகிறார். எத்தனையோ தடவை இடமாற்றம் கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் அவர், இவரைப் பிடித்து யார் காலிலே னும் விழுந்து அவற்றை ரத்துச் செய்துவிடுவார்.

'நெஷனல்' வாத்திமாருக்கு உதவுவதற்காகவே காத்திருக்கும் அந்த ஊர் எம்.பி-க்கும் அவர்களை பகைக்க மனமில்லாததால் தங்கம்மா ரீச்சர் போன்ற வர்கள் தொடர்ந்து அங்கு படிப்பிக்க... அல்ல பொழுது போக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

தங்கம்மா ரீச்சரின் மகனுக்கும் அன்று பரீட்சை முடிவுகள் வரவிருந்தன. அதனால் அவர் அடிக்கடி விட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தார்.

அவரது மகன் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல் லூரி ஒன்றிலேயே படித்துக் கொண்டிருந்தான். அந்தப் பள்ளிக்கூட ரீச்சர் ஒருவரின் பிள்ளையாவது அங்கு படிக்கவில்லை. அப்படிப் படித்த சிலர் கூட ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்கவில்லை. தங்களது படிப்பித் தலில் அந்த ரீச்சமாருக்கு அவ்வளவு நம்பிக்கை.

பரீட்சை முடிவு யாழ்ப்பாணத்துக்கு வேளையாகவே வந்துவிடும் என்பதால் முடிவுடன் மகன் எப்போ வீடு வருவான் என்ற தவிப்பில் தான் தங்கம்மா ரீச்சர் அடிக்கடி வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தார்.

பாடசாலை வாசலில் காணப்பட்ட ஆரவாரம் திடீரென அடங்கிவிட்டதிலிருந்து தபாற்காரன் வந்து விட்டான் என்பது புரிந்தது.

தபாற்காரன் அதிபரின் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபோது ஆசிரியர்கள் முண்டியடித்துக் கொண்டு அலுவலகத்துள் நுழைந்தனர்.

வகுப்புக்களில் படிப்பித்தலில் காட்டும் அக்கறை யைவிட பரீட்சை முடிவுகளை அறிவதில் அவர்களுக்கு அக்கறை அதிகமாக இருந்தது.

எப்படியும் தமது மாணவர்கள் ரியூசனில் நன்றாகப் படித்திருப்பார்கள் என்ற நம்பிக்கை போலும் அவர் களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கல்லூரிகளுக்கு சென்று படிப்பதற்கு வசதியில்லாத மாணவர்களே அந்தக் கிராமத்து மகா வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்தனர். அவர் களுக்குக் கைகொடுத்தது அந்தக் கிராமத்திலுள்ள ரியூட்டரி ஒன்று தான்.

யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளிலும் அதே சமயம் ரியூட்டரிகளிலும் படிப்பிக்கும் சில ஆசிரியர் கள் அந்தக் கிராமத்து ரியூட்டரிக்கும் வந்து போவதால் அந்தக் கிராமத்து மாணவர்கள் பயன் பெற்று வந்தனர்.

அந்தப் பாடசாலையில் உயர் வகுப்பில் முப்பதுக் கும் குறைவான மாணவர்களே பயின்று வந்தனர்.

அதிபரின் அலுவலகத்திலிருந்து வெளியேறிய ஆசிரியர்கள் எல்லோருமே மலர்ந்த முகங்களுடனேயே வெளியேறினர். எல்லோர் கண்களுமே யாரையோ தேடுவது போலிருந்தது.

தங்கம்மா ரீச்சர் மட்டும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வந்தார்.

மகன் யாழ்ப்பாணத்தால் வந்ததும் அவனது பெறு பேறுகளைக் கூறி பெருமைப் படலாம். எப்படியும் எமது பள்ளிக்கூட முடிவுகளில்ும் பார்க்க மகன்தானே கூடிய பெறுபேற்றைப் பெறுவான் என்ற நம்பிக்கை யில் இருந்தவளல்லவா அவள்.

அவளது நம்பிக்கை தவிடு பொடியாகிவிட்டது. யாருமே நினைத்துக்கூடப் பார்த்திராத முடிவு கிடைத் திருந்தது. நிச்சயம் இப்படியொரு பெறுபேற்றை தனது மகன் பெறமாட்டான் என்பது தங்கம்மா ரீச்சருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

மற்ற ஆசிரியர்களையெல்லாம் ஒவ்வொரு மாண வர்களாக சூழ்ந்து தத்தமது முடிவுகளை அறிவதற்கு முயன்று கொண்டிருந்தனர்.

அலுவலகத்துக்கு வெளியே வந்த அதிபர் மகிழ்ச் சிக்கழிப்பில் நிலத்தில் நிற்பவராகத் தெரியவில்லை. துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் எல்லோரையும் 'அசம்பிளிஹோலுக்கு' செல்லுமாறு கூறிவிட்டு அவர்களுக்கு முன்னாகவே அவர் சென்றுவிட்டார்.

'அசம்பிளிஹோல்' வழக்கம்போல் நிரம்பி விட்டது.

பரீட்சை முடிவுகளை அறிவதற்குத்தான் உயர் வகுப்பு மாணவர்கள் கூடியிருக்கிறார்கள். தமக்கு எது வும் புரியாவிட்டாலும் கூட அதிபர் அந்த இடத்தில் ஏறிவிட்டால் தாமெல்லாம் அங்கே கூடவேண்டும் என்ற நினைப்பில் சிறிய மாணவர்கள் அங்கே கூடினர்.

அதிபரின் உற்சாகத்திலேயே நல்ல முடிவு வந் திருக்கிறது என்பதை அந்த உயர் வகுப்பு மாணவர் களால் புரிய முடியாதா என்ன?

எப்போது அதிபர் தமது முடிவுகளை வாசிப்பார் என்பதிலேயே கவனமாக இருந்தனர் அவர்கள். ஒவ் வொருவர் இதயமும் படக்... படக்... என அடித்துக் கொண்டிருந்தது.

''மாணவர்களே...!''

அதிபர் தொடங்கியபோது அங்கே மயான அமைதி நிலவியது. அதிபர் பேசத் தொடங்கியபோது முன் னெப்போதுமே அப்படியொரு அமைதி நிலவியதில்லை. ஆனால் ஏனோ அன்று மாணவர்கள் மிக அமைதியா கவே அதிபரின் அடுத்த வார்த்தைகளுக்காகக் காத்திருந் தனர்.

''நமது பாடசாலையிலிருந்து தோற்றிய முப்பத்து நாலுபேரில் இருபது பேர் சித்தியடைந்திருக்கின்றனர். மாணவர்களாகிய உங்களால் எமது பாடசாலைக்குக் கிடைக்கவிருக்கும் நற்பெயருக்கு எப்படி நன்றி சொல் வதென்றே தெரியவில்லை.''

எந்தக் கூட்டத்துக்குப் போனாலும் அடிக்கடி கை தட்டிப் பழக்கப்பட்டவர் போலும், கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ரர் கையைத் தட்டித் தொடக்கிவிட மாணவர் களின் கைதட்டல் நிற்க நீண்டநேரம் சென்றது.

கைதட்டியவர்களில் பலருக்கு ஏன் தட்டுகிறோம் என்பது தெரியாது.

அதிபர் தொடர்ந்தார்-

''நம்ம பாடசாலையின் வரலாற்றையே இந்த முடிவு திசை திருப்பிவிட்டிருக்கிறது. உங்கள் திறமையால் நமது கிராமத்தவர்கள் சிந்திக்கப் போகிறார்கள். தினமும் இருபது மைல் பஸ்ஸில் பயணம் செய்து யாழ்ப்பாணத்து கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளை படிக்க அனுப்பும் நமது கிராமத்தவர்களுக்கு ஒரு சாட்டை யடி கொடுத்திருக்கிறீர்கள்....

''உங்களின் திறமையையெல்லாம் ரியூட்டரி தான் வளர்த்தது என்று கூறுபவர்களுக்கு பதில் சொல்லப் போகிறார் நமது மாணவர் மோகன்.

"ரியூட்டரிப் பக்கமே தலை வைத்திராத மோகன் மூன்று பாடங்களில் 'ஏ' தரத்தையும் மற்றைப் பாடத் தில் 'பி' தரத்தையும் பெற்றிருக்கிறார்."

மீண்டும் ஆசிரியர் தொடக்கி வைத்த கைதட்டல் ஒலி நிற்க மிக நீண்டநேரம் எடுத்தது.

பாடசாலையிலேயே சிறந்த முடிவு மோகனுக்குத் தான் கிடைக்கும் என்பது எல்லோரும் எதிர்பார்த்தது தான். ஆனால் இப்படியொரு முடிவுவரும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

அதிபர் ஒவ்வொருவராகப் பெயர் வாசித்து பெறு பேறுகளை அறிவித்துக் கொண்டிருந்தார். இடையிடையே கைதட்டல்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

மோகனுக்கு எப்போது அதிபர் மேடையை விட்டு இறங்குவார்; இந்த நல்ல செய்தியை அம்மாவுக்கு ஓடிப்போய் சொல்லுவேன் என்ற ஏக்கமாக இருந்தது.

மோகனைப் பற்றிக் குட்டி பிரசங்கமே நிகழ்த்திக் கொண்டிருந்தார் அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் வந்திருப்பான் என்று எண்ணியோ என்னவோ தங்கம்மா ரீச்சர் தனது உடலைத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு வெளியே போனார்.

வேறு எவரையும் பற்றி நன்றாகப் பேசிவிட்டால் அவருக்குப் பிடிக்காது. தன்னைப் பற்றி அல்லது தன் மகனைப் பற்றியே எல்லோரும் பேச வேண்டும் என்பதே அவரது நினைப்பு.

மோகன் மேடைக்கு அழைக்கப்பட்டான்.

மீண்டும் ஆரவாரம் தொடங்கியது.

மோகனைப் பற்றிய பூர்வீகம் முழுவதுமே அதிபருக்குத் தெரிந்ததுதான். பாடசாலையை விட்டு விலகி இனியும் அம்மாவைக் கஷ்டப்படாது பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்குப் பல தடவைகள் ஏற்பட்டதுண்டு.

அப்போதெல்லாம் அவனைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தியவர் அதிபர்தான், சில சந்தர்ப்பங்களில் அவர் சிறு சிறு உதவிகளைக் கூடச் செய்திருக்கிறார்.

அவன் திறமையாக சித்தியடைந்ததில் தனது சொந்த மகனே இப்படியொரு பெருமை பெற்றது போலல்லவா அவர் துள்ளிக் குதித்தார்.

மேடையில் மோகன் ஏறி நிற்க அதிபர் அவனைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

வெளியேறிய வாசலாலேயே தங்கம்மா ரீச்சர் உள்ளே வருவது தெரிந்தது. அவரது முகத்தைப் பார்த்த போதே ஏதோ விபரீதம் நடந்துவிட்டது போலிருந்தது.

மேடையை பார்த்ததும் அவரது கோபம் மேலும் அதிகரித்துவிட்டது போலும்.

''என்னதான் பாஸ் பண்ணினாலும் அப்பன் ஆரெண்டு தெரியாததுதானே...'' ரீச்சர் முணுமுணுத்தவாறு சென்று கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜேஸ்வரி ரீச்சருக்கு அவரது மகனின் முடிவை அறிந்து விடவேண்டும் என்ற ஆவல்-

"மகன் வந்திற்றானே...?" என்றார்.

"இப்பதான் வந்தவன்... புள்ள அழுதழுது கண் ணெல்லாம் சிவந்துபோச்சுது. மூண்டு 'எஸ்'தான் வந்திருக்குது" என்று சொல்லிமுடிப்பதற்குள் தங்கம்மா ரீச்சருக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

ராஜேஸ்வரி ரீச்சருக்கு இப்போதுதான் உயிர் வந்தது போலிருந்தது. தனது மகன் மூன்று தடவை பரீட்சைக் குத்தோற்றியும் பாஸ் பண்ணாததால் தங்கம்மா அக்கா வின் மகனும் பாஸ் பண்ணக்கூடாதென்பது அவரது எண்ணம் போலும்.

வேறு எவற்றில் இல்லையேனும் இந்த ஒரு விடயத் தில் மட்டுமாவது இவர்களிடையே ஒற்றுமை இருக்கத் தான் செய்தது.

பரீட்சை முடிவை அறிவிப்பதற்கு மேடையேறிய அதிபர் தனது பணியை நிறைவேற்றிவிட்டு இறங்கிய போது பாடசாலை மாணவர்களெல்லாம் குதூகலத் துடன் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

உயர் வகுப்பு மாணவர்கள் மட்டும் கூடிக்கூடி நின்று தத்தமது முடிவுகளைப் பரிமாறிக் கொண்டிருந் தனர்.

நல்ல பெறுபேறுகளை நம்பிக்கையுடன் எதிர் பார்த் திருந்த மாணவர்கள் சிலர் சோகமே உருவாகக் காட்சி யளித்தனர்.

இவ்வளவு காலமாகப் புன்னகையையே செல வழித்து வந்தவர்கள் அன்று எப்படித்தான் சேமிக்கக் கற்றுக் கொண்டார்களோ தெரியவில்லை.

எல்லாப் பாடங்களிலும் 'பெயில்' ஆன பின்ன ரும்கூட எந்தவித சலனமுமில்லாமல் ஓடித் திரிந்த மாணவர்களும் இல்லாமலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முற்றத்தில் மோகனைச் சுற்றி மாண வர் எல்லோரும் கூடிவிட்டனர். அப்படியொரு முடிவு வேறு யாருக்காவது வந்திருந்தால் அவனை அன்று விட் டிருக்கவே மாட்டார்கள். பள்ளிக்கூடத்துக்கு முன்னா லுள்ள கடைக்கு தூக்கியே சென்று அவனை 'வெறுங் கையுடன் இல்லம் புக்கான்' என்ற நிலையில் வீட்டுக்கு அனுப்பியிருப்பார்கள்.

ஆனால் மோகனைத் தூக்கிச் சென்றாலும் அவனிட மிருந்து எதையுமே எடுக்க முடியாதென்பது அவர்களுக் குத் தெரியாதா என்ன?

அலுவலக வாசலில் நின்று அதிபர் மோகனைப் பெயர் கூறி அழைத்தார். கூடவே அங்கு குழுமியிருந் தவர்களையும் வருமாறு அழைத்தார்.

மோகனை முந்திக் கொண்டு ஓடிச் சென்றனர் மற்றவர்கள்

அதிபரின் அழைப்பு எதைப் பற்றியதாக இருக்கும் என்பதை அவர்களால் ஊகிக்க முடிந்தது —'அசெம் பிளி ஹோலில் வைத்தே அதிபர் சூசகமாகத் தெரி வித்திருந்தார்.

''யாழ்ப்பாண மாவட்டத்திலேயே, திறமையான பெறு பேற்றைப் பெற்றுள்ள மோகனைப் பாராட் டாதுவிட்டால் நாம் நமது கடமையிலேயே தவறியவர் களாக ஆகிவிடுவோம்...''

என்று ஏற்கெனவே அதிபர் தெரிவித்திருந்தார்—

''தம்பிமார் யாழ்ப்பாணத்துப் பிரபல கல்லூரி களில எல்லாம் ஆகக்கூடிய றிசல்ஸ் என்ன, எண்டு நாளைக்கு 'ஈழநாடு' வரும் நம்ம மோகன்ர றிசல்ஸ் வேற யாருக்குமே வந்திருக்காது எண்டுதான் நினைக் கிறன். இப்பிடியொரு சாதனையைப் புரிந்திருக்கிற மோகனை கௌரவிக்க வேண்டும்.''

அதிபர் கூறிக்கொண்டிருந்த போதே மாணவர்கள் குறுக்கிடத் தொடங்கிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது இரவில் பள்ளிக்கூடத்தில் ஏதும் நடக்கும் என்றே ஏங்கிக் கொண்டிருக்கும் சிலதுகளுக்கு இச்சந் தர்ப்பம் நாவில் தேன் வார்த்ததுபோல் இருந்தது.

''சேர் ஒரு பிரமாதமான விழா ஒண்டையே நடத்துவம்'' என்றான் ஒரு மாணவன்.

நான்கு பாடங்களிலும் பெயிலாகிய பின்னரும் எது வித சலனமுமில்லாமல் திரிபவனல்லவா. கிடைத்திருக் கின்ற சந்தர்ப்பத்தை நழுவ விடுவானா என்ன?

அவனது யோசனையை ஏற்றுக் கொள்பவர்களாக பலரும் பல கருத்துக்களையும் தெரிவித்தனர்.

''சேர்... மோகனை பாராட்டி நாம் எடுக்கிற விழா அடுத்தடுத்த ஆண்டுகளில் பல மோகன்கள் உருவாக வழி வகுக்கும்.'' - மாணவன் ஒருவன் கருத்து இது.

விரைவில் வரவிருக்கும் ஸ்தாபகர் தின விழாவைச் சிறப்பாக நடத்துவதுடன் மோகனையும் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிப்பது என்ற தனது யோசனையை அதிபர் தெரிவித்தார்.

''சேர் லைற் பிடிக்கவேண்டும் லவுஸ்பீக்கர் பிடிக்க வேண்டும் பள்ளிக் கூடத்து றோட்டெல்லாம் சோடிக்க வேண்டும்.''

லைற்பிடிக்க வேண்டும் என்று சொன்னால் தான் இரவில் விழா நடக்கும் என்பதுதான் அவனது நினைப் பாக இருந்தது.

மாதம் இருபது ரூபாகூட செலவழித்து ரீயூசன் எடுக்க இயலாத நிலையில் இருக்கும். மோகனால யுனிவசிற்றிக்குப் போய் படிக்க எப்படி முடியும்? இத் தனை சிறப்பான பெறுபேறு கிடைத்தும் தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் இருக்கும் மோகனுக்கு விழாவில் ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்பதே அதிபரின் யோசனையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சும்மா விழா நடத்துறதாலை நாம மோகனைக் கௌரவிக்க முடியாது'' என்று அதிபர் கூறியபோதே சில மாணவர்களுக்கு விளங்கிவிட்டது.

ஸ்தாபகர் தினவிழா நடாத்துவதற்கென்று ஊரில் பணம் சேர்ப்பது என்றும் விழாவில் வீண் ஆடம் பரங்களைத் தவிர்த்து மிஞ்சும் காசை மோகனுக்கு வழங்குவதெனவும் மாணவர்கள் தெரிவித்த யோசனை சரியாகப்படவே ஏற்றுக் கொண்டார்.

மோகன் மட்டும் எதுவுமே கூறவில்லை.

அவன் இதயத்தில் பெரிய மனப் போராட்டமே நடந்து கொண்டிருந்தது.

எப்போது பரீட்டை முடிவு வரும் ஏதேனும் வேலைக் குப் போகலாம் என்ற எதிர்பார்ப்புடனே இருந்த அவனுக்கு பாடசாலையில் நடக்கும் ஏற்பாடுகளைப் பார்த்தால் தொடர்ந்து படி என்று அவனுக்குக் கூறு வது போலிருந்தது.

இனியும் தனது தாயை வருத்தக் கூடாது. அவளை வீட்டிலேயே வைத்து ராசாத்தி போல பார்க்க வேண் டும் என்பதையே அவனது மனம் விரும்பியது.

தன் ஒருவனையே நம்பி தனது வாழ்க்கையை ஒரு மெழுகுவர்த்தி ஆக்கிவிட்ட தாயை இனியும் நோக விடக் கூடாது என்பதிலேயே அவனுக்கு அக்கறையாக இருந்தது.

''சேர்...''

மோகன் இப்போதுதான் முதல்தடவையாக வாயைத் திறந்தான்.

எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந் தனர்.

''சேர்... நீங்க எல்லாரும் என்னில காட்டுற அக் கறைக்கு எப்பிடி நன்றி சொல்லுறதெண்டே எனக்குத் தெரியலை. என்னைப்பற்றி, என்ர குடும்பத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி உங்க எல்லாருக்கும் நல்லாவே தெரியும். ஆண்டவனும் நான் பட்ட கஷ்டத்தப் பார்த்து பிழை விடாமலே நடத்தினார். எப்பிடியும் ஒருவேலை எடுக்கக் கூடிய 'றிசல்ஸ்' வந்ததில எனக்கு நல்ல சந்தோஷமாகத்தான் இருக்குது. என்னைப் பாராட்டுறதால மற்ற பிள்ளையளுக்கு உற்சாகம் ஏற்படுமெண்டால் அது எனக்கும் சந்தோஷம் தான். ஆனா எனக்குக் காசு எதுவும் சேர்க்கிறது..."

அதிபர் மட்டுமல்ல மற்ற மாணவர்களும் அழுதே விட்டனர்.

மாணவர்கள் எல்லோரும் அக்கிராமத்தையே சேர்ந்தவர்கள் என்பதால் அவனது குடும்பநிலை பற்றி எல்லோரும் நன்றாகத் தெரிந்துதான் வைத்திருந்தனர்.

எதிர்காலத்தில் டாக்டராக வரும் சந்தர்ப்பத்தை மோகன் இழந்துவிடப் போகிறானே என்பது அவர்களுக்கு ஏக்கமாகவிருந்தது.

பல்கலைக்கழகத்தின் வளவிற்குள்ளாவது கால் வைக்க எத்தனையோ பேர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு அதிபர் பேசினார்.

"மோகன்... இப்பிடி ஒரு சந்தர்ப்பம் உமக்கு பிறகு எப்பயுமே கிடைக்காது. இத்தனை வருஷமா கஷ்டத்திலேயே வாழ்ந்துவிட்ட உமக்கு இன்னும் சில காலம் அதைத் தொடர்ந்து அனுபவிக்கிறது பெரிய கஷ்டமாக இருக்காது 'அட்வான்ஸ் லெவல்' றிசல்ஸ் ஸோட இந்தக் காலத்தில் என்ன வேலையைத் தான் எடுக்கிறது. வீணா மனதை அலட்டிக் கொள்ளாம வீட்டபோய் நல்லா யோசிச்சுப் பாரும்."

அதிபர் கூறிமுடித்த பின்னர் மாணவர்கள் கலைந்து சென்றனர். மோகனை மாத்திரம் அதிபர் நிற்குமாறு கூறியதால் அவன்மட்டும் நின்று கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் தனது இருக்கையில் இருந்த பின்னர் எதிரே இருந்த கதிரையில் இருக்குமாறு அவனுக்குக் கூறினார்.

ஒரு டாக்டரே தன் முன்னால் நிற்பது போல் இருந்தது அவருக்கு. மிக மரியாதையாக நடந்து கொண்டார்.

இவையெல்லாம் மோகனுக்கு என்னவோ செய்தன. அவன் கூனிக்குறுகி அமர்ந்திருந்தான்.

''மோகன்... கஷ்டங்கள் எப்பயுமே தற்காலிகமானவைதான். இதைக் கண்டு பயந்து ஒதுங்கி விடக்கூடாது'' அதிபர் கூறியபோது குறுக்கிட்டான் மோகன்.

''இல்லை சேர் ரியுசன் எடுக்கவே முடியாததால நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பவன். ரியுட்டரியில படிச்சவையின்ற நோட்ஸ் புத்தகங்களை வாங்கி ராப்பகலா படிச்சதால தான் இப்பிடி பாஸ் பண்ண முடிஞ்சுது. இந்த நிலையில யுனிவசிற்றியில படிக்கிறதெண்டா என்னால முடிஞ்ச காரியமே சேர்.''

''உமக்கு உதவுறதுக்குத் தானே நாங்க காசு சேர்க்கிறதுக்கு நல்ல யோசனை வச்சிருக்கிறம்.''

''என்னைப் படிப்பிக்கிறதுக்கு தான் சேர் உங்களால உதவ முடியும். ஆனா நான் யாருக்காக இன்னும் உயிரோட இருக்கிறனோ அவவுக்கு என்னால எதுவுமே செய்ய முடியாது போயிடுமோ எண்டுதான்... எனக்காகத் தன்ர உடம்பையே வருத்தி மாடாய் உழைச்சுக் கொண்டிருக்கிற அம்மா இப்பிடியே இன்னும் ஆறு மாசத்திற்கு இருப்பாவே தெரியலை.''

அவனது எண்ணத்தை அதிபரால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவனது குடும்பத்தைப் பற்றி அவருக்கு நன்றாகவே தெரியும் என்பதால் அவர் ஏற்கெனவே அதுபற்றிச் சிந்திக்காமலில்லை. அதனால்தான் அவர் ஸ்தாபகர் தின விழாவைச் சாட்டாக வைத்து எப்படியும் பெரிய தொரு தொகையைச் சேர்த்துவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மோகன்.... உம்மட படிப்புச் செலவுகளைப் பற்றி நீர் யோசிக்கவே தேவையில்லை. மகாபொல புலமைப் பரிசில் உமக்கு கட்டாயம் கிடைக்கும். அதை விட பாங்கிலயும் லோன் எடுக்கலாம். நாங்க சேர்க்கிற காசை அம்மாவின்ர பேரில 'டிப்போசிற்' பண்ணினா மாதம் மாதம் வட்டியை எடுக்கலாம்.''

அவனது தகப்பன் இருந்திருந்தால் கூட இவ்வளவு தூரம் அக்கறை எடுத்திருப்பானோ தெரியவில்லை.

அதிபருக்கு அவனது வளர்ச்சியில் அத்தனை அக்கறையிருந்தது.

அதிபரின் அலுவலகத்தை விட்டு வெளியேறிய போது தான் மோகனுக்கு இத்தனை நேரமாகியும் தனது முடிவை தாயாருக்கு இன்னும் சொல்லவில்லையே என்பது நினைவுக்கு வந்தது.

ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி... இல்லை குடிசை நோக்கி சென்று கொண்டிருந்தான்.

அவள் இன்னும் வேலையால வரவில்லை.

அவள் வீட்டுக்கு வரும் வரை காத்திருக்க முடியவில்லை. வேலை செய்யும் இடத்துக்கே சென்று விட்டான்.

கிராமத்திலுள்ள பெண்கள் எல்லோரும் சேர்ந்து சில வருடங்களுக்கு முன்னர் அமைத்த மாதர் முன்னேற்றச் சங்கம் கிராமங்களில் அவ்வப்போது தோன்றி மறையும் சங்கங்கள் போலல்லாமல் சிறப்பாக செயல்பட்டு வந்ததால் இங்கே பெரியதொரு தொழிற்சாலையே உருவாகி விட்டது.

நான்கு ஐந்து பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அப்பளத் தொழிற்சாலை இன்று முப்பதுக்குமதிகமானவர்களுக்கு வேலை வழங்கும் விருட்சமாக மாறியிருந்தது.

ஆரம்பத்திலிருந்த ஐந்து பேரில் ஒருத்தியான யோகம் தான் இப்போதும் அங்கே பணி புரிந்து கொண்டிருக்கும் பழையவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களெல்லாம் அவளுக்குப் பின்னர் அங்கு வந்தவர்கள்தான்.

ஆனாலும் என்ன, அவளுக்குப் பிறகு அங்கு வந்த வர்களெல்லாம் இப்போது அங்கே மேற்பார்வையாளர் களாகவும் மனேச்சராகவும் இருந்து வருகிறார்கள். அதற்காக யோகத்தைவிட படித்தவர்களாக இருப்பார் களென்று எண்ணி வீடாதீர்கள்.

யோகம் ஒன்றும் படிக்காதவளல்ல, பத்தாம் வகுப் பில் படித்துக் கொண்டிருந்தபோதே அந்த விபத்தில் சிக்கியதால் இந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தவள் தான்.

அந்தக் கிராமமே நாகம்மாக்கா என்றால் ஒரு தடவை சலாம் போட்டெழும்பும். அவ்வளவுக்கு அவருக்கு அங்கே செல்வாக்கு. இளம் வயதிலேயே கணவனை இழந்துவிட்ட போதிலும் அவன் தேடிவைத்த சொத்து பத்துத் தலைமுறைக்குப் போதுமானது.

நாகம்மாக்காவும் என்ன சும்மாவா இருக்கிறா. கொழும்பில் இருந்த கணவரின் கடைகளையெல்லாம் ஆட்களை வைத்து அவரே நிர்வகித்து வந்தார்.

நாகம்மாக்காவின் ஒரே மகள் ரஞ்சனியுடன் படித்த வள்தான் யோகம்.

சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்த யோகத் துக்கு பள்ளிக் காலங்களில் அவ்வப்போது ஆறுதல் சொல்லித் தேற்றுபவள் ரஞ்சனி ஒருத்திதான்.

தாய் தந்தையரை இழந்த பின் மாமனாரின் அர வணைப்பில் வாழ்ந்து வந்த போது மாமியின் கொடு மைகள் தாங்காமல் பல தடவைகள் தற்கொலை செய்ய முற்பட்டபோதிலும் ரஞ்சினி தடுத்திருக்கிறாள்.

ரஞ்சினி இருக்கிறாள் என்ற நம்பிக்கையில்தான் இவளும் வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

இந்தக் கிராமத்துக்கு வந்து சேர்ந்த அவளை ரஞ் சினி தனது வீட்டிலேயே வைத்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சேவை என்றால் தயங்காது செய்யும் நாகம் மாக்காவுக்கு அது சந்தோஷமானதாகத்தான் இருந்தது. யோகத்தை தங்களுடனேயே வைத்திருப்பது என்று முடிவு செய்து விட்டனர்.

தாயும் மகளுமாகச் சேர்ந்தே அப்படியொரு கட்டுக் கதையையும் அவிட்டு விட்டனர்.

இளம் வயதில் திருமணமாகி ஆறு மாதங்களிலேயே கணவன் இறந்து விட்டதால் இங்கே அவள் வந்திருப்ப தாகவே தெரிவித்திருந்தனர்.

ஆனாலும் யோகத்தின் வாழ்க்கையின் இரகசியங் களை நீண்ட காலம் மறைத்து வைத்திருக்க முடியவில்லை. எப்படியோ அந்தச் செய்தி அங்கு முழுவதும் பரவிவிட் டது.

இதன் பின்னர் இந்தக் கிராமத்தில் அவள் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டவள் தான்.

வேறு எங்கேயாவது போய் விடுவோமா என்று அவள் எண்ணிய போதெல்லாம் ரஞ்சினிதான் தடுத் தாள்.


நாளடைவில் சமூகத்தின் புறக்கணிப்புக்களுக்கு எல் லாம் பழக்கப்பட்டவளாக மாறிவிட்ட யோகம் நாகம் மாக்காவின் வீட்டு வேலைகளையெல்லாம் வேலைக் காரர்களுடன் சேர்ந்து கவனிக்கத் தொடங்கினாள்.

ரஞ்சினியும் திருமணம் முடித்துக் கொண்டு கண வனுடன் நைஜீரியா சென்ற பின்னர் யோகம் தனது குழந்தையுடன் அவர்களின் வேலைக்காரியாகவே மாறி விட்டாள்.

அப்பளக் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட போது யோகத்தின் மகன் மோகனுக்கு ஏழுவயதுதான் இருக் கும்.

நாகம்மாக்காதான் அப்போது மாதர் சங்கத்தின் தலைவியாக இருந்ததால் யோகத்தையும் அங்கு சேர்த்து விட்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய பிள்ளையை படிப்பித்து எப்படியும் ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவந்து விடவேண்டும் என்பதில் 'வெறி' கொண்டிருந்த யோகத்துக்கு அது நல்ல சந்தர்ப்பமாக அமைந்து விட்டிருந்தது.

அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது விடடால் அவள் தனது மகனைப் படிப்பித்திருக்கவே முடியாமல் போயிருக்கும். நாகம்மாக்கா போடும் சாப்பாட்டை தின்றுவிட்டு இருந்திருக்க வேண்டியதுதான்.

அவளே வேலை செய்து சம்பாதிக்க சந்தர்ப்பம் கிடைத்ததால் மகனை அந்த கிராமத்திலுள்ள பாடசாலையில் விட்டு படிப்பித்து வந்தாள்.

மோகன் அப்பளக் கம்பனிக்கு வந்து சேர்ந்த போது பெண்களெல்லாம் கூடி கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தனர்.

அங்கே வேலை செய்பவர்களில் பலர் இளம் பெண்கள் என்பதால் ஊர் பிள்ளைகளின் பரீட்சை முடிவுகளைப் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் புறப்பட தயாராகிவிட்டிருந்ததும் தெரிந்தது.

மோகன் உள்ளே வந்தபோது யோகம் தான் செய்த அப்பளங்களை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஏற்கனவே மகனின் பெறுபேறுகளை யோகம் அறிந்துவிட்டதால் கால்கள் நிலத்தில் நிற்கவில்லை.

மோகனுக்குத்தான் எங்கட பள்ளிக்கூடத்திலேயே நல்ல றிசல்ஸ்ற்'' —

றோட்டால் போன அந்தப் பிள்ளைகள் சொல்லிக் கொண்டு போனதைக் கேட்ட பின்னரும் அவள் எப்படித்தான் நிற்பாள்.

மோகன் வந்ததை யோகம் காணவில்லை.

''நம்ம டாக்டர் வந்திற்றார். டாக்டர் வந்திற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெண்கள் கூச்சலிட்டனர். அவர்களது கூச்சல் கட்டிடத்தையே அதிர வைத்தது.

திரும்பிப் பார்த்த யோகம் அங்கே மகனைக் கண்டதும் ஓடி வந்தாள். நடக்கவே முடியாது நொந்து போன அவளது உடலுக்கு எப்படித் தான் சக்தி வந்ததோ தெரியவில்லை. இல்லையெனில் இத்தனை வேகத்தில் ஓட இல்லை பறக்க அவளால் முடிந்திருக்குமா?

மகனைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினாள்.

மாறி மாறி அவள் முத்தமிடுவதைப் பார்த்த பல பெண்களுக்கு வாயில் எச்சில் ஊறியது.

எத்தனை பேர் கற்பனையில் செய்து முடித்ததை அங்கே யோகம் செய்து கொண்டிருந்தாள்.

அவர்களைப் போலல்ல தாயின் இதயத்திலிருந்து கிளம்பிய பாசத்தை அவள் வெளிக் கொணர்ந்து கொண்டிருந்தாள்.

இந்த பதினேழு வருடங்களாக அவள் அனுபவித்து வந்த வேதனைகள் எல்லாம் ஒரு கணத்தில் மறைந்து விட்டன. தனது மகனை டாக்டராக காணப்போகின்ற எந்தத் தாயின் உள்ளத்தில் வேதனை இருக்கும். மகனை டாக்டராக காணும்வரை என்ன கஷ்டத்தையும் படத் தயாராக இருந்தாள் அவள்.

இதுவரை அவள் பட்ட கஷ்டங்களிலும் பார்க்க கூடுதலானதொரு கஷ்டம் வரவாபோகிறது.

மகனையும் கூட்டிக் கொண்டு நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (2)

வீட்டே போய் குளித்து விட்டு மகனையும் கூட்டிக் கொண்டு ஐயனாரட்ட போக வேண்டும் என்ற எண் ணத்தில் மிக வேகமாகவே யோகம் நடந்து கொண் டிருந்தாள்.

மோகன் தாய்க்கு சில அடி தூரம் பின்னாலேயே நடந்து கொண்டிருந்தான். தாயாரின் கோலத்தை பார்த்த போது அழுகையே வந்துவிடும் போலிருந்தது அவனுக்கு.

இந்த நாற்பது வயதிலேயே எப்படியாய் இளைத் துப் போயிருந்தாள் அவள். அறுபது வயதைத் தாண்டி விட்டவர்களைப்போலல்லவா இருந்தாள்.

வீட்டுக்குப் போகும் வழியில் தான் நாகம்மாக் காவின் வீடு இருந்தது. அவருக்கும் போய் மகனின் முடிவுகளைக் கூறிவிட வேண்டும் என்று எண்ணிய யோகம் மகனையும் அழைத்தவாறு உள்ளே சென்றாள்.

நாகம்மாக்காவுக்கும் அந்தச் செய்தி தேனாகத்தான் இனித்தது. ''யோகம்.... அவன் இப்பிடி ஒரு உயர்ந்த நிலைக்கு வருவான் எண்டு எனக்கு எப்பவோ தெரி யும்'' என்றாள் நாகம்மாக்கா.

''வாறன் அம்மா... வீட்ட போயிற்று ஐயனார் கோயிலுக்குப் போகவேணும். ஆறுதலாக வாறம்'' என்று கூறியவாறு யோகம் புறப்பட்டாள்.

நாகம்மாக்கா வாசல்வரை வந்து அவர்களை வழி யனுப்பி வைத்தாள். இறங்கி முற்றத்தில் நடந்த போது தெற்குப் பக்கமாக இருந்த அந்தச் சிறிய மால் தெரிந் தது.

நாகம்மாக்கா வீட்டில் வேலைக்காரர்கள் தங்கு வதற்கென்று கட்டப்பட்ட சிறிய வீட்டில்தான் முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம் குடியிருந்தாள். மோகன் பிறந்து தவழ்ந்து ஓடி விளையாடிய வீடு அது.

யோகம் அப்பளக் கம்பனியில் வேலை செய்யத் தொடங்கியதும் அவளது வேண்டுகோளின் பேரி லேயே நாகம்மாக்கா அந்த வீட்டை யோகத்துக்கு கொடுத்திருந்தா.

மோகனுக்கு அப்போது பத்து வயது. ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தவன். பாடசாலை யிலிருந்து வரும்போது ஒரு நாள்.

அழுது கொண்டே வந்தான்.

பதறிப்போன யோகம் மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டவாறு ''என்ன ராசா நடந்தது? ஏன் அழுகி றாய்?'' என்றாள்.

அழுதழுது மோகனின் முகமெல்லாம் வீங்கி இருந் தது. நீண்ட நேரமாகவே அவன் அழுதிருப்பது தெரிந் தது.

''அம்மா... பள்ளிக்... கூடத்தில... எல்லாரும் என்னை ... நாகம்மாக்காட வேலைகாறன் வேலை காறன் எண்டு நக்கலடிக்கினம்'' அழுதழுது கொண்டே கூறிய சிறுவன் –

''இனி நான் பள்ளிக்கூடத்துக்கே போகமாட்டேன்'' என்றான்.

யோகத்துக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ''என்ர ராஜா எல்ல அழாதயடி'' என்றவாறு மகனைத் தேற்றினாள்.

வெளியே இவற்றைக் கேட்டு கொண்டு நின்ற நாகம்மாக்காவே யோசனை கூறினாள்.

'யோகம்... நம்ம சமுதாயம் எப்பயுமே திருந்தப் போறதில்லை. இனி நெடுக மோகனைப் பாத்து இப்பிடித்தான் கூப்பிடப் போகுதுகள். அது அவன்ர வாழ்க்கையையே பாழாக்கப் போகுது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாக்கா சொல்வது யோகத்துக்கு சரியாகவே பட்டது.

''யோகம்... நம்மட மகேஸ்வரியின்ர வீட்டுக்கு பக்கத்தில கிடக்கிற காணிக்க சின்னமால் ஒண்டப் போட்டுத்தாறன். நீங்க போறதுதான் நல்லது. பக்கத் தில மகேஸ்வரியும் புருஷன் செத்தப் பிறகு பிள்ளைய ளோட தனியத்தானே இருக்கிறாள். முன்னால வைர வரும் இருக்கிறார்தானே...''

அடுத்த வாரமே வைரவர் கோவிலுக்கு முன்னா லுள்ள அந்தக் காணியில் குடியேறிவிட்டனர் யோகமும் அவளது மகனும்.

அப்போது யோகத்துக்கு முப்பத்தி மூன்று வயது தான். வாழ்க்கையின் விரக்தி அவளை உலுக்கிவிட்டி ருந்த போதிலும் அவளது உடலில் இருந்த இளமையின் இரகசியங்கள் மறைந்துவிடவில்லை.

தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இரவில் மகேஸ்வரியின் வீட்டிலேயே தங்கிவந்தாள். நாளடை வில் மோகனும் வளர்ந்து விடவே அவனது பாதுகாப்பு தனக்குப் போதும் என்று தனது குடிசையிலேயே இரவிலும் வாழ பழகிக் கொண்டாள். அவளது இள மையும் அவளைவிட்டு எப்போ சென்றுவிட்டது.

அப்போது நாகம்மாக்கா மட்டும் இந்த யோசனை யைத் தெரிவித்திருக்காவிட்டால் அவளது கனவுகளெல் லாம் கலைந்திருக்கும்; மோகன் பள்ளிக்கூடத்துக்கே போகாமல் விட்டிருப்பான்.

நாகம்மாக்காவை மனமார வாழ்த்திக்கொண்ட வாறு யோகம் கேற்றைத் திறந்து கொண்டு வீடு நோக்கி நடந்தாள்.

பின்னால் வந்து கொண்டிருந்த மோகன் —

''அம்மா...'' என்றான்.

என்ன என்பதுபோல யோகம் திரும்பிப் பார்த் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் ஏன் பாஸ் பண்ணினன் எண்டு இப்பதான் கவலையா இருக்கு...''

யோகத்துக்கு எதுவும் புரியவில்லை.

''நான் பாஸ்பண்ணிற்றன் எண்ட உடன நீங்க எல்லாரும் சந்தோஷப்படுறீங்க. நீங்க எடுக்கிற சம் பளம் எனக்கு பஸ் காசுக்கே காணாது. நான் என் னண்டு யாழ்ப்பாணத்தில படிக்கிறது...''

''என்ர ராசா... உன்னை இப்பிடி ஒரு நல்ல நிலையில பாக்கிறதுக்குத்தானே நான் இவ்வளவு காலமா உயிரோட இருக்கிறன். என்ன கஷ்டப்பட்டெண்டாலும் நான் உன்னைப் படிப்பிப்பன்''.

''நீங்க இனியும் கஷ்டப்பட்டா நான் டாக்டரா வெளிய வாறப்போ நீங்க இருக்கமாட்டீங்கம்மா... இனியும் உங்களை கஷ்டப்படவிடமாட்டேன்.''

உறுதியாகவே சொன்னான் மோகன்.

மோகனின் வார்த்தைகளைக் கேட்டு பூரித்துப் போனாள் யோகம்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்க எப்படியும் ஒரு வருடம் செல்லுமென்பதால் அந்த கால இடைவெளி யில் யாழ்ப்பாணத்திலுள்ள நாகம்மாக்காவின் கடை யில் வேலை செய்யப்போவதாக மோகன் கூறினான்.

''இல்லை ராசா... அதுவரைக்கும் நீ படிப்பை நிறுத்திடாத. படிச்சதயண்டாலும் திருப்பிப்படி. நான் நாகம்மாக்காட்ட கடனா எவ்வளவு கேட்டாலும் தருவா பிறகு நீ உழைச்சுக் குடுக்கலாம்.''

அது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''எல்லாம் ஆறுதலா யோசிக்கலாம் வாராசா'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

மத்தியானச் சாப்பாட்டுக்கு ஆயத்தங்களை கவனிக்கச் சென்ற யோகம் முதலில் மோகனை குளிக்கு மாறு கூறிவிட்டு தனது வேலைகளில் கவனமானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் குளித்து முடிந்ததும் ஐயனார் கோவிலுக்குப் புறப்பட்டனர். வீட்டுக்கு முன்னாலுள்ள வைரவர் கோவிலுக்கு சென்று கும்பிட்டுவிட்டே அங்கு சென்றனர்.

அவர்களின் வீட்டுக்கு முன்னால் வைரவர் இருந்த போதிலும் எதற்கெடுத்தாலும் ஐயனாரையே வேண்டி பழக்கப்பட்டுவிட்டது' அவளுக்கு.

நாகம்மாக்கா வீட்டில் நீண்ட காலம் வாழ்ந்துவிட்டதால் அப்போதெல்லாம் அடிக்கடி ஐயனார் கோவிலுக்குப் போவாள். நாகம்மாக்கா வீட்டிலிருந்து நூறுயார் தூரத்தில் தான் கோயில் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (3)

தனக்கு என்ன பிரச்னை வந்தாலும் யோகம் நாகம்மாக்காவிடம் தான் ஆலோசனை கேட்பதுண்டு.

.அன்று ஞாயிற்றுக்கிழமை வேலை இல்லாததால் நேரத்துடன் சமையல் வேலையை முடித்துவிட்டு நாகம் மாக்கா வீட்டுக்குப் புறப்பட்டாள்.

அங்கே அவள் போய்ச் சேர்ந்தபோது ''வா யோகம் நீயும் வந்தது நல்லாப்போச்சு'' என்று வரவேற்றாள் நாகம்மாக்கா.

வாசல் பக்கம் முதுகு காட்டி அமர்ந்திருந்தவர், திரும்பிப் பார்த்தபோதுதான் யார் என்று தெரிந்தது.

பள்ளிக்கூட அதிபர்தான் அங்கே இருந்தார்.

யோகம் அருகே வந்த போது அவரும் ''வாங்க உங்க மகனப்பற்றித்தான் கதச்சுக் கொண்டிருக்கிறம்'' என்றார்.

அவளும் அதைப்பற்றித்தானே கதைக்க இங்கு வந்தவள். ஆனால் அதிபர் இல்லாதிருந்தால் நாகம் மாக்காவுடன் மனம்விட்டுப் பேசியிருக்கலாமே என்று எண்ணிக்கொண்டாள்.

''மாஸ்ரர்... நான் படுகிற கஷ்டங்களைப் பாத் திற்று தான் இனிப் படிக்கமாட்டன் என்று நிற்கிறார்'' என்று யோகம் கூறி முடிப்பதற்குள் அழுகையே வந்து விடும்போலிருந்தது.

''தங்கச்சி... நீங்க பயப்படாதீங்க. நான் அவரைச் சரிபண்ணுவன். என்னட்டயும் அப்பிடித்தான் சொன்ன வர்'' என்றார் அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோகம் ஊரில என்ர வேலைக்காரி எண்டு எல்லாரும் கதைச்சாலும் நீ எனக்கு புள்ள மாதிரித்தான். உன்ர புள்ளயின்ர முன்னேற்றித்தில எனக்கு அக்கறை இருக்காதா... நீ ஏன் கவலைப்படுறாய்?''

நாகம்மாக்கா கூறியபோது காலில் விழுந்து வணங்குவது போலப் பார்த்தாள் யோகம்.

''இல்லை அம்மா, நான் இனியும் வேலைக்குப் போகப்படாது அம்மாவை வைத்து தான் சோறு போட வேணும் எண்டுதான் துடிக்கிறான்'' என்றாள் யோகம்.

இதைத்தானே மோகன் பாடசாலையிலும் கூறியிருந்தான். அவனின் கவலையைப் போக்குவதற்கு அதிபர் போட்டிருந்த திட்டத்தை நாகம்மாக்காவுக்கும் கூறி அவரின் சம்மதத்தைப் பெறுவதற்காகத்தானே அதிபர் அங்கே வந்திருந்தார்.

''தங்கச்சி... உங்கட மகன்ர றிசல்ஸ்ற் வந்த அண்டைக்கே எனக்குத் தெரியும். யாழ்ப்பாணத்திலேயே முதல்தரமான முடிவா அதுதான் இருக்குமெண்டு. அது மாத்திரமில்லை. எங்கட பள்ளிக்கூடத்தில இருந்து 'மெடிக்கல் கொலிஜ்சு'க்கு போற முதல் ஆளும் மோகன் தான். அதுதான் வாற முப்பதாம் திகதி நடக்கிற ஸ்தாபகர் தின விழாவில வைச்சு மோகனையும் பாராட்டுறதா யோச்சிருக்கிறம்''. அதிபர் இடையில் சற்று நிறுத்தியதும் நாகம்மாக்கா தொடர்ந்தார் —

''அந்த விழாவில மோகனுக்கு பணமுடிச்சு வழங்கி கௌரவிக்கிறதா மாஸ்ரர் யோசிச்சிருக்கிறாராம். விழாவுக்கு ஊரில் காசு சேர்க்கப்போகினம். அதுதான் இப்ப என்னட்ட யோசினை கேக்க வந்தவர். யோகம் உன்ர மகன்ர படிப்புச் செலவுக்கு நான் எவ்வளவும் தருவன். ஆனா உன்ர மகன் விரும்பமாட்டான் எண்டு எனக்குத் தெரியாதா - விழாவின்ர பேரில நானே பத்தாயிரம் ரூபா போடுறன். எப்பிடியும் இருபதெண்டாலும் மிஞ்சும். அவ்வளத்தையும் நாங்க பரிசாக மோகனுக்குத்தான் குடுக்க இருக்கிறம்; அப்பிடியே ஆரட்டயும் வட்டிக்கு குடுத்திட்டு நீ வேலைக்குப் போகாம சீவிக்கலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கட மகனுக்கு படிப்புச் செலவைப் பற்றி யோசிக்காதையுங்க நான் எப்பிடியும் மஹாபொல ஸ்கொலர்சிப் கிடைக்க ஏற்பாடு செய்வன்'' என்றார் அதிபர்.

நன்றி பெருக்குடன் இருவரையும் பார்த்தாள் யோகம். அவர்களுக்கு எப்படி நன்றி சொல்லதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

நாகம்மாக்காவிடம் விடை பெற்றுக்கொண்டு எழுந்த அதிபர், ''தங்கச்சி ஒண்டுக்கும் யோசியா தேங்கோ'' என்று யோகத்திடம் கூறிவிட்டுச் சென் றார்.

''யோகம்... என்ர மகன் டாக்டராக இருந்துமென்ன லண்டன், அமெரிக்கா எண்டு திரியிறான், உன்ர மகன் தான்ரி இந்தக் கிழவிக்கு வைத்தியம் பார்க்கப்போறான்'' என்று நாகம்மாக்கா கூறியபோது யோகத்தின் கண்களி லிருந்து முத்தாக நீர் சொட்டியது. கவலையாலல் அது ஆனந்த கண்ணீர்.

★ ★ ★ ★

பாடசாலையில் ஸ்தாபகர் தின விழாவுக்கான ஏற் பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. விழாவிற்கென குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. குழுவின் தலைவர் நாகம்மாக்காதான். குழுவிலுள்ள மற்ற எல்லோரும் அவர் என்ன சொன்னாலும் தெய்வ வாக்காக ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள்தான். பாடசாலையிலிருந்து அதிபர் மட்டுமே குழுவில் இருந்தார்.

தங்கம்மா ரீச்சர் போன்றவர்களுக்கு விழா என் றாலே நாவில் தேன் வார்த்தது போலிருக்கும். பள் ளிக்கூடத்தில் தினமும் ஏதேனும் விழா நடந்தாலும் அவர்களுக்கு விருப்பம்தான்.

எப்படியும் விழாவிற்கான சமையல் ஏற்பாடுகளை அவளே பொறுப்பெடுத்து விடுவாள். அவளது வீட் டுக்குப் போகும் தட்டிப்படலைக்கு மிக அருகேதான் 'ஹோம் சயன்ஸ்' பாடம் நடக்கும் அறை இருந்தது. விழாவுக்கான பலகாரங்கள் அங்கே வைத்துத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார்கள். ஒரு பெரிய பார்சல் எப்படியும் பின் பக்கத்தால் மறைந்துவிடும்.

மாணவிகளிடம் பார்சலைக் கொடுத்துவிடும்போது உயர் வகுப்பு மாணவர்கள் சில வேளைகளில் அவற் றைப் பறித்துவிட்டு வெறும் பெட்டியை மட்டும் கொடுத் தனுப்பும் சம்பவங்களும் நடப்பதுண்டு.

ஸ்தாபகர் தின விழா எப்போது வரும் என்று பார்த்திருந்த தங்கம்மா ரீச்சருக்கு பெரிய ஏமாற்றமாய் போய்விட்டது.

விழாவை நடத்தும் குழு சமையல் பொறுப்பை தன்னிடம் தராது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

சமையல் பொறுப்பு தன்னிடம் தரப்படாவிட்டா லும் விழாவன்று எப்படியும் 'சுருட்டி' விடலாம் என்று தேற்றிக் கொண்டாள்.

ஸ்தாபகர் தின விழாவில் மோகனுக்குப் பாராட்டு வைபவம் நடத்துவது அங்குள்ள ஊர் வாத்திமாருக்கு விருப்பமில்லை. அதனால்தான் அதிபர் முன்னேற் பாடாக விழாக் குழுவை அமைத்தார். பெயருக்குத் தான் குழுவே தவிர சகலதையும் நாகம்மாக்காவும் அதிபருமே கவனித்து வந்தனர்.

நாகம்மாக்கா தலைபோட்டிருந்ததால் முழு ஊருமே விழாவுக்குத் தயாராகியது போலிருந்தது. ஊரில் காசு சேர்க்கும் போது நாகம்மாக்காவும் ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்கினார்.

''அட... நாகம்மாக்காவும் வந்திருக்கிறா'' என்று எண்ணியவர்களாக எல்லாருமே தங்களால் முடிந்த தைப் போட்டார்கள். அவர்கள் போட்டாலென்ன போடாவிட்டால் என்ன எப்படியும் இருப்பத்தையா யிரம் ரூபா மோகனுக்கு பரிசளிக்கப்படும் என்பது அதிபருக்கு முதலே தெரியும்.

நாகம்மாக்காவே பரிசையும் மேடையில் வைத்துக் கொடுக்க வேண்டும் என்று கூறினால் போதும் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய காசையும் போட்டு இருபத்தைஞ்சுதான் கொடுப்பா என்பது தெரியாதா என்ன?

ஊர் முழுவதும் விழாபற்றியே பேச்சு, எப்போது கூட்டமொன்று கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பேச்சாளர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டிருந்தனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் கலைஞர் பாலச்சந்திரனின் நிகழ்ச்சி ஒன்றுக்கும் ஏற்பாடாகியிருந்தது.

தினசரிகளிலெல்லாம் விழாச் செய்தி வெளியாகியிருந்தது. முதல் நாள் மாலையே நாகம்மாக்காவின் காரில் 'லவுஸ்பீக்கர்' கட்டி ஊரூராக 'எனவுன்ஸ்' பண்ணினார்கள்.

இளம் பெண்களெல்லாம் கடைசியாக வாங்கிய சேலையை உடுத்த சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து கொண்டனர்.

பாடசாலையின் முன் வீதியின் இருபக்கங்களும் நீண்ட தூரத்துக்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வண்ண வண்ண லைற்றுக்கள் வீதியை காணிவேல் நடக்கும் இடம்போல காட்சி தரவைத்தது.

பாடசாலை பிரதான வாசலில் வாழைமரங்களும் மிகப்பெரிய அலங்கார வளைவும் கட்டப்பட்டு எங்கு பார்த்தாலும் மகரதோரணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

மாணவர்களெல்லாம் மிக சுறு சுறுப்பாக தத்தம் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இரண்டு மணியிலிருந்தே பாடிக்கொண்டிருக்கும் 'லவுஸ்பீக்கரி'ல் இடையிடையே கூட்டம் சில நிமிடங்களில் தொடங்கப் போவதாக அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கம்மா ரீச்சர் சுறுசுறுப்பாக இருந்தார். அவள் எதிர்பார்க்காதவாறு விழாவில் கலந்துகொள்ள வருபவர்களுக்கான இராப்போசன விருந்து வைபவம் அவள் பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி பின்பக்கக் கதவால் வீட்டுக்கு போய் வந்து கொண்டிருந்தாள். எதிர்ப்படுகின்ற வாத்திமாரிட மெல்லாம் இந்த வேலையை பொறுப்பேற்றுக் கொண்ட தால் பெரிதாக சிரமப்படுவதாகக் கூறத் தவறவில்லை.

அன்று முழுவதும் தங்கம்மா ரீச்சர் வீட்டில் உலையே வைக்கவில்லை என்பது பலருக்குத் தெரியாது. வீட்டு வேலைக்காரியும் காலையிலிருந்து பள்ளிக்கூடத்தில் தானே சமையல் வேலைகளைக் கவனித்து வருகிறாள். எப்படித்தான் வீட்டில் சமைப்பது.

விழாவுக்கு ஒருவர் இருவராக வரத்தொடங்கினர். சிறப்பு விருந்தினராக எம்.பி.தான் கலந்துகொள்கிறார். இப்படியான விழாக்களும் இல்லையென்றால் அவருக்கு எப்படித்தான் பொழுதுபோகும்.

எம்.பி. வரும்போது முகத்தைக் காட்டினால்தான், தாம் வந்திருப்பதும் அவருக்குத் தெரியும் என்பதால் சில நெஷனல்காரர்கள் நேரத்துடனேயே காத்துக் கிடந் தனர். அவர் வரும்போது முன்னுக்கு நின்று கும்பிட்டு வரவேற்க வேண்டும் என்பது அவர்களது நினைப்பு.

விழாவிற்கு போவதற்கென காரில் புறப்பட்ட நாகம்மாக்கா வழியில் யோகத்தையும் ஏற்றிக்கொண்டு செல்வதற்காக வைரவர் கோவிலடியில் காரை நிறுத்து மாறு றைவர் மணியத்திடம் கூறினார். முன் சீற்றி லிருந்து இறங்கிய நடராசர் யோகத்தின் விடுநோக்கி ஓட்டமும் நடையுமாக சென்றார்.

நாகம்மாக்காவின் கார் எப்போது கேற்றைத் தாண்டினாலும் நடராசர் தான் முன் சீற்றில் இருப் பார். பின் சீற்றில் நாகம்மாக்கா இருந்தால் மட்டும் கூனிக் குறுகி இருப்பார்.

''அக்கா அவ வரவில்லையாம்... நம்மளைப் போகட்டாம்'' என்று கூறியவாறு நடராசர் வந்து காரில் ஏறியபோது பின்னால் யோகமும் வந்து கொண் டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் இப்படி நடக்கும் எந்தவொரு பொது வைப வங்களுக்கும் யோகம் போகமாட்டாள் என்பது நாகம் மாக்காவுக்குத் தெரிந்ததுதான். ஆனால் இன்று அவளது மகனுக்கே நடக்கும் பாராட்டு விழாவுக்கும் வரமாட் டாள் என்று நினைக்கவில்லை.

யோகத்தை எப்படியும் அழைத்துக்கொண்டு போக வேண்டும் என்று எண்ணிய நாகம்மாக்கா காரை விட் டுக் கீழே இறங்கினார்.

''என்ன யோகம்... நீ வரவில்லையா'' என்றார் அவர்.

''என்ன அம்மா... நான்தான் இப்பிடியான இடங் களுக்கு வாறதில்லையே. உங்களுக்குத் தெரியும்தானே.''

''இது சாதாரண விழா இல்லை. உன்ர மகனுக்கு நடக்கிற பாராட்டு விழா நீ கட்டாயம் வரத்தான் வேணும்.''

''இந்தச் சந்தோஷமான விழாவிலும் நான் வந்து அழுகிறதையா நீங்கள் விரும்புறியள். இந்தக் கிராமத் தில இருக்கிறவங்கள் எல்லாம் உங்களைப் போல இல் லையம்மா. பக்கத்தில இருக்கிறவை என்ர காதில விழுகிறமாதிரியே அதக் கூறுவினம்.'' கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கூறினாள் னாள் யோகம்.

''இல்லை யோகம் நீ வரத்தான் வேணும். நல்லா யோசிச்சுப்பாரு. நீ வராட்டி மோகன் என்ன நினைப் பான் — ஏன் வரயில்லையெண்டு அவன் கேட்டால் எனக்குச் சொன்ன மாதிரி அவனுக்குச் சொல்லுவியே.''

யோகம் பதில் கூறுமுடியாது நின்றாள்.

மோகனுக்கு யோகத்தின் வரலாறு எதுவுமே தெரி யாது. அனாதையான அம்மா தனக்கென ஒரு துணை யைத்தேடிக் கொண்டு சிலகாலத்திலேயே மீண்டும் அனாதையானவள் என்பதுதான் அவனுக்குத் தெரிந்த சங்கதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த உண்மைகள் எதுவும் வெளியே வராமல் மிகக் கவனமாக பார்த்துக் கொண்டாள் யோகம். அது பற்றி அறிந்தால் மகனின் படிப்பு குழம்பிவிடுமே என்பது தான் அவளுக்கு எப்போதும் பயமாக இருந்தது.

நாகம்மாக்காவின் வற்புறுத்தலால் ஒருவாறு யோகம் சம்மதித்தாள்.

நாகம்மாக்காவும் யோகமும் பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேர்ந்தபொழுது மண்டபம் சனக்கூட்டத்தால் நிரம்பியிருந்தது. மேடையில் பலர் காணப்பட்டனர். நாகம்மாக்காவைக் கண்டதும் அதிபர் இறங்கி ஓடிவந்து அவரை மேடைக்கு வருமாறு அழைத்தார்.

யோகம் ஒதுங்கி ஒரு மூலையில் அமர்ந்து கொண் டாள். நாகம்மாக்கா அதிபருடன் மேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கரவொலி வானைப் பிளந்தது.

கூட்டம் ஆரம்பமாகிவிட்டது. அதிபர்தான் முதலில் பேசினார்.

''இவ்வருடம் உயர்தர பரீட்சையில் எமது பாட சாலை யாழ்ப்பாண மாவட்டத்திலேயே ஒரு சாத னையை நிலைநாட்டி இருக்கிறது. எமது மாணவன் மோகன் மாவட்டத்திலேயே சிறப்பான பெறுபேறு களைப் பெற்றிருக்கிறான்.....''

மேடையிலிருந்த எம்.பி. தான் முதலில் கைதட்டி னார். அதைக் கண்ட முன்வரிசை உறுப்பினர்களும் தமது பிஞ்சுக் கரங்களால் தட்டிக் கொண்டனர்.

அதிபர் கூறிய செய்தி கேட்டு வாயைப் பிளந்த ஊரவர்கள் இன்னும் வாய்மூடவில்லை. அவர்களுக்கு அந்தச் செய்தி இப்போதுதான் தெரிந்தது. மோகன் ஏதோ பாஸ் பண்ணியிருக்கிறான் என்பது மட்டும் தான் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

ஒருவருக்கொருவர் அதைப்பற்றிக் கதைத்துக் கொண்டனர். ''அட.... இவன் இந்தளவு கெட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரனே. அப்பன் ஆரெண்டு பொடிக்குத் தெரியா விட்டாலும் அப்பன் கெட்டிக்காறன் போல.''

அவர்கள் பேசிக் கொண்டது யோகத்தின் காதிலும் விழுந்தது. இதற்காகத்தானே அவள் இப்படியான இடங் களுக்கே வருவதில்லை.

அதிபர் பேசி முடித்ததும் ஒவ்வொருவராகப் பேசிக் கொண்டிருந்தனர். எல்லோருமே மோகனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். அவனது 'பூர்வீகம்' தெரி யாதவர்கள்தானே அவர்கள்.

ஊர் மக்களுக்கு 'ஏன்ராவந்தோம்' மெதுவாக இடையிலே எழுந்து சென்று விடுவோமா என்றிருந்தது. ஆனாலும் அப்படி போக மனம் விடவில்லை. அடிக் கடி றேடியோவிலும் டி.வி.யிலும் பார்த்த பாலச் சந்திரனின் நிகழ்ச்சியை விட்டுட்டுப்போக எப்படித் தான் அவர்களுக்கு மனம் வரும். அதற்காகத்தானே அங்கே வந்தவர்கள் அவர்கள்.

இதை தெரிந்துதான் நாகம்மாக்கா எப்படியும் ஒரு கலைநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கிராமத்தில் தேர்தல் கூட்டம் நடத்துவதாக இருந்தாலும் கடைசியில் டி.வி.யில் ஒரு படம் காட்டினால்தான் அங்கே சனக்கூட்டம் வரும்.

எம்.பி. பேசத்தொடங்கியபோது மாலைகள் மாறி மாறி வந்தன. பற்பசைக்கு விளம்பரம் கொடுப்பவர் கள் போல காட்சி தந்தார் அவர். ''ஒருவன் எப்படி வந்தான் என்பதை விட எப்படி இருக்கிறான் என்பதே பெரிது'' என்ற பொன்மொழியுடன் அவர் தனது பேச்சைத் தொடங்கினார்.

மோகனின் பூர்வீகத்தைப் பற்றி யாரோ ஒரு 'நெஷனல்' ஏற்கனவே போதித்து விட்டான் என்பது தெரிந்தது.

''அனாதைகள்... தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் தான் திறமைசாலிகள் இருக்கிறார்கள். அவர்கள் தமது திறமையை வெளிக்கொணர முடியாது இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியானவர்களை நாம் இனம் கண்டு பாராட்டப் பழகிக் கொள்ள வேண்டும். பாடசாலைகளிலே இப்படியானவர்களை மற்ற மாணவர்கள் புறக்கணித்து வருவதால் அவர்கள் விரக்தியடைந்து தமது கல்வியை நிறுத்திக் கொள்கின்றனர். இந்த நிலையை மாற்றுவதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்....''

முன்னால் பத்திரிகை நிருபர்கள் சிலர் இருந்து குறிப்பெடுத்துக் கொண்டிருப்பதை கண்டுவிட்ட பின்னர் எம்.பி. தனது பேச்சை நிறுத்துவாரா என்ன? தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார்.

பரிசளிப்பு வைபவம் தொடங்கியது. நாகம்மாக்கா அதிபரிடம் போய் ஏதோ கதைத்தபின் அதிபர் எழும்பி 'உயர்தர பரீட்சையில் ஆகக் கூடிய பெறுபேறுகளைப் பெற்ற ஐந்து மாணவர்களுக்கு முதலில் திருமதி நாகம்மா பண முடிப்பு வழங்கிக் கௌரவிப்பார்'' என்றார்.

மோகனுக்கு மாத்திரம் பணமுடிப்பு வழங்கினால் ''ஊர்க்காசில் படிக்கிறவன்'' என்ற பட்டம் மோகனுக்கு கிடைத்துவிடுமே என்றெண்ணி ஐந்துபேருக்கு கொடுக்க திட்டமிட்டிருந்தார் நாகம்மாக்கா.

ஆனால் மற்ற நால்வருக்கும் தலா ஆயிரம் ரூபா தான் முடிப்பில் போடப்பட்டிருந்தது.

ஒவ்வொருவராக அதிபர் பெயர் சொல்லிக் கூப்பிட நாகம்மாக்கா முடிப்புகளை வழங்கினார்.

பரிசளிப்பு வைபவம் முடிந்து கலைநிகழ்ச்சிகள் தொடங்கின. மேடையிலிருந்தவர்கள் இறங்கி கீழே வந்தனர்.

இனியும் அங்கே இருந்தால் தலையே வெடித்து விடும் போலிருந்தது யோகத்துக்கு. நாகம்மாக்காவும் மோகனும் காணக்கூடியவாறு எழுந்து வெளியே சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுநோக்கி நடந்தபோது அவளது நினைவுகள் பதினெட்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை இரைமீட்டுக் கொண்டது.

★ ★ ★ ★

சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்து விட்ட யோகம் தாய் மாமனாரின் வீட்டில் அவர்களது அர வணைப்பிலேயே வாழ்ந்து வந்தாள். முதலில் தாயை இழந்தவள் பின்னர் தகப்பனையும் இழந்தபோது ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கென்று சொந்தமாக வீடு ஒன்றில்லாத போதிலும் தாயின் சீதனக் காணிகள் இருந்தன. அவளின் பேரில் போட்டுவைத்த ஐம்பதாயிரம் ரூபாவை நம்பித்தான் அவளது மாமியார் வீட்டுக்குள் எடுத்தாள் என்பது பலருக்குத் தெரியாது.

மாமியார் வீட்டுக்குக் குடிபுகுந்த ஆரம்ப நாட் களில் மாமி தனது சொந்தப் பிள்ளை போலத்தான் பார்த்தாள். காலப்போக்கில் அவள் தனது சுயரூபத் தைக் காட்டியபோது துடிதுடித்துப் போனாள் யோகம்.

வீட்டு வேலைகளெல்லாம் அவளது பொறுப்பி லேயே வந்து சேர்ந்தன. மாமியின் மகள் வதனி பள் ளிக்கூடத்தால் வந்ததும் ரியுசனுக்குப் போய்விடுவாள். வீட்டு வேலைகள் எல்லாம் யோகம்தான் செய்யவேண் டும்.

யோகம் பள்ளிக்கூடத்தால் வந்ததும் அன்று அவள் செய்யவேண்டிய வேலைகளைப் பட்டியல் போட்டுக் கூறிவிட்டுக் கதைப் புத்தகம் ஒன்றுடன் சாய்ந்துவிடு வாள் மாமி.

மாமா கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்கு வரும் போது இரவு பத்து மணிக்கு மேலாகிவிடும். இதனால் அங்கு நடப்பது எதுவும் அவருக்குத் தெரியாது. திரு நெல்வேலியில் உள்ள அவர்களின் வீட்டிலிருந்து சில மைல்கள் தூரத்தில்தான் யோகம் படிக்கும் பிரபல மகளிர் கல்லூரி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவளது கல்லூரியிலும் பரிசளிப்பு விழா நடந்தது. வழக்கம் போலவே யோகம் வந்திருந்தாள். இன்றாவது யோகம் தன்னை அலங்கரித்துக் கொண்டு தான் வருவாள் என்று எதிர்பார்த்திருந்த ரஞ்சினிக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது.

விடாப்பிடியாக நின்று யோகத்தை தனது ஹொஸ்ர லுக்கு அழைத்துச்..... இழுத்துச் சென்றாள். தனது அலுமாரியிலிருந்து வண்ண வண்ணச் சேலைகளில் ஒன்றை எடுத்து உடுத்துமாறு கூறிவள் அவளை அலங் கரிப்பதில் ஈடுபட்டாள்.

நாகம்மாக்காவின் மகளிடமா அலங்காரப் பொருட் களுக்கு குறைவிருக்கப்போகிறது.

தனது கூந்தலில் தொங்கிக் கொண்டிருந்த கன காம்பரம் சரத்தில் அரைவாசியை அவளது தலையில் சூடினாள்.

ரஞ்சினியின் காஞ்சிபுரம் சாரிக்குள் மறைந்து அழகுப் பதுமையாகக் காட்சிதந்தாள் யோகம்.

இருவருமாக விழா மண்டபத்துக்கு வந்தபோது அதிபர் வரவேற்புரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். மண்டபம் நிரம்பி வெளியேயும் சனக்கூட்டம் நின்றது.

கூட்டத்தில் அரைவாசிக்கும் கூடுதலானவர்கள் இளம் வாலிபர்கள்தான். அவர்கள் ஒவ்வொருவரின தும் பார்வை அக்கம்பக்கத்தைச் சுற்றியே இருந்தது.

''அங்கபார் மச்சான் ரெண்டு வருகுதுகள்'' என்று நண்பன் கூறியபோதுதான் வரதன் திரும்பிக் பார்த் தான். அவனது கண்ணையே நம்பமுடியவில்லை. ''மச் சாள் இவ்வளவு வடிவானவளே'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டவன் வாயில் எச்சில் ஊறியது.

''மச்சான்... அந்த சிவப்பு சாரியோட வந்தது யாரு தெரியுமே என்ர மச்சாளடா இங்கதான் படிக்கிறாள்'' என்றான் வரதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுதானே பாத்தன் இங்க வாறதுக்கு நீ துடிச்ச துடிப்ப''

''அவளைப் பார்க்கிறதுக்கு நான் இங்கேயே வர வேணும்? தாயும் தகப்பனும் செத்த பிறகு அவள் எங்கட வீட்டதான் இருக்கிறாள்'' என்றான் வரதன்.

''அப்ப உனக்கென்னடா...''

''இவ்வளவு நாளா நான் பிழைவிட்டுட்டன் மச்சான் இப்பதான் கவலைப்படுறன். இனி விடக்கூடாது.''

நண்பர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் போது வரதனை யோகம் கண்டுவிட்டாள்.

யோகத்தின் மாமாவின் ஒரே ஆண்பிள்ளைதான் வரதன். அவன் வீட்டிலிருப்பதே சில மணித்தியாலங் களதான். காலையில் எழும்பியவுடன் ரியுசனுக்குப் போய்விடுவான். ரியுசன் முடிந்தபின்னர் வந்ததும் வராததுமாக சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடத்துக்குப் போவான். மாலையிலும் புத்தகங்களை எறிந்துவிட்டு ரியுசனுக்குப் போய்விடுவான். எப்போது திரும்பிவரு வான் என்பது யோகத்துக்குத் தெரியாது. பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்புகின்றபோது அந்தச் சந்தியில் பலதடவைகள் அவனைக் கண்டிருக்கிறாள். யோகத் தைக் கண்டதும் மற்றப் பக்கம் திரும்பிவிடுவான்.

அவன் வீட்டுக்கு வந்துவிட்டால் போதும் மாமி ஓடி ஆடிக் கவனிப்பாள்.

பிள்ளை ஓடி ஓடி கஷ்டப்பட்டுப் படிக்கிறானே என்று வலு அக்கறை அவளுக்கு.

தன்னை அவன் கண்டுகொள்ள முன்னர் ஒளிந்து கொள்ள நினைத்தவள் பக்கத்தில் நின்ற ரஞ்சினிக்குள் மறைய எத்தனித்தபோது வரதன் தன்னைக் கண்டுவிட்ட தைக் கண்டாள்.

அவளிற்குள் பயம் குடிகொண்டுவிட்டது. தான் கட்டியிருக்கும் சேலை தன்னுடையதல்ல என்பது அவனுக்குத் தெரியும். அவள் இன்றுதானே முதன் முதலில் சேலை உடுத்திருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் போய் மாமிக்குச் சொன்னால் போதும் தொடங்கிவிடுவாள்...

கேட்டிருந்தால் நிச்சயம் தனது சேலையைத் கட்டிக் கொள்ளத் தந்திருக்கமாட்டாள். ஆனால் தன்னிடம் கேட்காமல் வேறு யாரிடமேனும் வாங்கி உடுத்ததைத் தெரிந்தால் தன்னிடம் கேட்காததற்காக எப்படியெல் லாம் பேச முடியுமோ அப்படியெல்லாம் பேசுவாள் என்பது யோகத்துக்குத் தெரியும்.

பரிசளிப்பு விழா முடிந்த போது நன்றாக இருட்டி விட்டது. ஹொஸ்ரலுக்குச் சென்று உடுப்பு மாற்றி விட்டு அவசர அவசரமாக வெளியே வந்தபோது வெளியே வரதன் நின்றான்.

''என்ன யோகம்... உன்னைக் கூட்டிக்கொண்டு போறதுக்குத்தானே காத்திருக்கிறன்'' என்று வரதன் கூறியபோதுதான் அவனைக் கண்டவள், ''ஓ மச் சானே'' என்றாள்.

''வாவன் யோகம் சயிக்கிலில போவம், நீ நடந்து வர நல்லா நேரம் செல்லப் போகுது. அம்மா நீ இல் ல்லாததால வேலை செய்த களைப்பில உன்னில தான் ஏறிவிழுவா'' என்று வரதன் கூறியபோது யோகத்துக் கும் சரியாகவேபட்டது.

ரஞ்சினியின் சேலையை உடுத்ததையும் சொல்ல வேண்டாம் என்று மச்சானிடம் கேட்கலாம் என்று எண்ணியவள் அவனது சைக்கிளில் ஏறினாள்.

அவளது கெட்டகாலம் போலும், சைக்கிலுக்குப் பின் 'கரியர்' இருக்கவில்லை. அவள் முன் 'வாரில்' இருந்தபோது வரதனின் இருகைகளிலும் படாமல் இருக்கமுடியவில்லை.

வரதன் மெல்ல அவளின் கையை எட்டிப்பிடித் தான். யோகம் சட்டென விடுவித்துக் கொண்டாள்.

''என்ன யோகம்... என்னில விருப்பமில்லையே. உன்னைப் பார்க்கிறதுக்காக இங்க எத்தின தரம் வந்தி ருக்கிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கள்ள விரும்பம் இல்லையா மச்சான் எனக்கு. ஆனா இது நடக்கிற காரியமே. லச்சம் லச்சமாக வாங்கிறதுக்கு மாமி பார்த்துக்கொண்டிருக்கிறா''

''யோகம்... அம்மாவப் பற்றி நீ பயப்பிடாத. எனக்கு எது விருப்பமோ அதில அவ குறுக்க நிக்க மாட்டா.''

கூறிக்கொண்டே மீண்டும் அவன் யோகத்தின் கை யைப் பிடித்தபோது அவள் விடுவிக்க முயலவில்லை.

வீட்டுக்குச் சற்றுத் தூரத்திலேயே யோகத்தை இறக்கிவிட்டு சைக்கிலை சற்று வேகமாக மிதித்தான். சீற்றில் இருந்து ஓடக்கூட அவனது மனம் விடவில்லை. அவ்வளவு வெற்றிக் களிப்பில் இருந்தான் அவன்.

யோகத்துக்கு மட்டும் என்ன சந்தோஷம் இல்லாமலா இருந்திருக்கும்.

வீட்டை சென்றடைந்தபோது ஏறிவிழுந்தாள் மாமி. ஆனால் வழக்கம்போல நச்சரிப்புக்கள் நீண்ட நேரத் துக்கு இருக்கவில்லை. வழமைக்கு மாறாக நேரத்துட னேயே வந்து சேர்ந்துவிட்ட மகனுக்கு முட்டை அடிப் பதிலும் வேண்டிய விசேட சமயலிலும் கவனமாயிருந் தாள்.

மறுநாள் காலை வரதன் ரியூசனுக்குப் போகவில்லை. காரணம் கேட்ட தாயாருக்கு ரியூசன் மாஸ்ரருக்குச் சுக யீனம் என்று கூறினான்.

அடிக்கடி யோகம் இருக்கும் இடத்துக்கு வந்து போனவன் யாரும் பார்க்காத நேரங்களில் கண்களால் பேசிக்கொண்டான். யோகமும் பதிலுக்குச் சிரிப்பாள். இந்த வீட்டில் தன்னிலும் அக்கறை காட்டுவதற்கு ஒரு ஜீவன் கிடைத்துவிட்டதில் அவளுக்கு மட்டற்ற மகிழ்ச் சியாக இருந்தது.

''காலையில் புட்டுக்கு முட்டைப் பொரியல் தானே உங்களுக்குப் பிடிக்கும். அதுதான் பொரிக்கிறன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே வந்த வரதனிடம் கூறினாள் யோகம். அவளது கன்னத்தில் கிள்ள வந்தவன் ஆள் அரவம் கேட்கவே ''யோகம் ரீ ஒண்டு போடு'' என்று ஆணையிட்டான்.

அப்போதுதான் உள்ளே வந்த வதனி தமையனைக் கண்டதும் ஆச்சரியத்துடன் ''என்ன இண்டைக்கு மழை வரப்போகுது. ரியூசனுக்குப் போகேல்லயே'' என்றாள்.

அவன் விறுக்கென்று வெளியேறினான்.

வதனி பாடசாலைக்குப் புறப்பட்ட பின்னர்தான் யோகம் வெளிக்கிடுவாள். அவள் இரண்டு பஸ் ஏறி இறங்கிப் போகவேண்டுமென்பதால் அல்ல — இருவரையும் ஒன்றாகப் போகக் கூடாதென்று மாமி கண்டிப்பான உத்திரவிட்டிருந்தாள்.

காலை வேலைகளை அவசர அவசரமாக செய்து முடித்துவிட்டு யோகம் புறப்பட்டாள்.

அவள் கேற்றைச் சாத்துவதற்காகத் திரும்பியபோது வரதன் சைக்கிலை எடுத்துக் கொண்டு ''அம்மா... நான் போயிற்று வாரன்'' என்று கத்தினான்.

''யோகம்... நான் ஏன் இண்டைக்கு ரியூசனுக்குப் போகயில்லையெண்டு தெரியுமே'' சைக்கிலை ஓடிக் கொண்டே கேட்டான் வரதன்.

''அதுதான் அம்மாவுக்குச் சொன்னீங்களே மாஸ்ரருக்குச் சுகமில்லையெண்டு.''

''விசரி... உனக்குத்தான் சுகமில்லை.''

அவள் எதுவும் விளங்காது விழித்தபோது ''உன்னோட கதச்சுக்கொண்டு போறத்துக்காகத்தான் அப்பிடி ஒரு பொய் சொன்னனான்'' என்றான் வரதன்.

''நான் என்ன ஓடவே போறன். என்னோட கதைக்குறதுக்காக உங்கட படிப்பைக் குழப்பிறதே'' என்றவள் உள்ளூர மகிழ்ந்து கொண்டாள். தன்னுடன் கதைப்பதற்கே அவன் இவ்வளவு ஆவலாக இருக்கிறானே என்பதை அறிந்தபோது மகிழ்ச்சியிருக்காதா என்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் 'கேற்' வரை கூடவே வந்த வரதன் ''யோகம்... பின்னேரம் சந்திப்பம்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

பாடசாலை தொடங்க இன்னும் நேரமிருந்தது. ரஞ்சினி 'ஹொஸ்ரலில்' தான் இருப்பாள் என்று எண்ணியவள் அங்கே சென்றபோது அவளும் புறப்படுவதற்குத் தயாராக இருந்தாள்.

''வாடி... யோகம், ராத்திரி எப்பிடி பயமில்லாமல் போனியே'' என்றாள்.

''மச்சான் வந்திருந்தவரெல்லே அவரோடதான் போனநான்'' என்று அவள் கூறியபோதே நாணத்தால் முகம் சிவந்தது.

''ஓ அப்பிடியே... மச்சானை எனக்குக் காட்டவே இல்லையே. எனக்கே இத்தனை நாளா நீ மறைப்பாய் எண்டு கனவிலகூட நினைக்கயில்லை''

''ரஞ்சி... உனக்குச் சொல்லாம விடுவனேடி. அதுதானே நேர இங்கவந்தநான்.''

தன்னுடைய ஊகம் சரியாகிவிட்டதை அறிந்த போது ரஞ்சினிக்கு சிரிப்புத் தான் வந்தது.

''ரஞ்சி... வீட்டில என்னை எல்லாரும் நடத்துற விதம் உனக்குத் தெரியும்தானே. என்னில அன்பு செலுத்துறதுக்கு நீ ஒருத்திதான் இருந்தாய்''

''இப்பதான் ஆள் கிடைச்சிருக்கே. இனி எங்க உனக்கு என்ர நினைப்பு வரப்போகுது'' என்று ரஞ்சினி குறுக்கிட்டபோது 'போடி...' என்று சிணுங்கிய யோகம் தொடர்ந்தாள்.

''நேற்று விழாவுக்கு அவர் வந்திருந்தத நான் ஒரு பொருட்டாக நினைத்திருந்தால் உனக்கு காட்டியிருப்பன். வீட்டில் என்னைக் கண்டாக்கூடக் காணாமல் போன மாதிரி போறவர் திடீரெண்டு எனக்காகக் காத்திருந்ததுதான் எனக்கு ஆச்சிரியமாப் போயிருந்தது' என்ற யோகத்திற்கு, அவன் தனது ஆசையை வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியது முதல் காலை பாடசாலை கேற் வரை வரும் போது நடந்தது அனைத்தையும் கூறிமுடித்த போதுதான் நிம்மதியாக இருந்தது.

வேறு யாருடனும் யோகம் நட்புவைத்திருந்தால் எச்சரித்திருப்பாள் ரஞ்சினி. ஆனால் அவளது மச் சானையே விரும்பியபோது அவளுக்கும் அது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

வேறு யாருடனும் யோகம் நட்பு வைத்திருந்தால் என்று தனது சந்தேகத்தையும் கேட்டாள் அவள்.

''அவற்ற விருப்பத்துக்கு எதைச் செய்யவும் மாமி தயங்கமாட்டா ரஞ்சி. அவர் எப்பிடியும் அவவ சரிப்பண்ணிப் போடுவார்.'' என்றாள் யோகம்.

பாடசாலை ஆரம்பமாவதற்கான மணி அடித்தது.

இருவரும் மிகுதியை மத்தியானம் கதைக்கலாம் என்று எண்ணியவர்களாக வகுப்பறை நோக்கிச் சென் றனர்.

பாடசாலை முடிந்ததும் வெளியே போனால் மற்ற மாணவிகளும் வருவார்கள் என்பதால் உடனே போகா மல் ரஞ்சினியுடன் ஹொஸ்டலுக்குச் சென்றவள் சில நிமிடம் அங்கே இருந்து விட்டு புறப்பட்டாள்.

வெளியே வந்தபோது மாணவிகள் எல்லோரும் போய்விட்டது தெரிந்தது. சந்தியில் வரதனும் வேறு சிலரும் நின்றனர். அவர்களைக் கடந்து சென்றபோது ''சரியடாப்பா... நான் வாறன்'' என்று வரதன் கூறு வது கேட்டது.

''என்ன யோகம்... இவ்வளவு நேரம் என்ன செய்தனி

''பள்ளிக்கூடம் விட்ட உடன வந்திருந்தால் இப்பிடி வர ஏலுமே''

''என்ர யோகம்... கெட்டிக்காறிதான்''

அவன் சைக்கிலை ஓடியவாறு கதைத்துக் கொண்டு வந்தான். பிரதான வீதியால் போகமல் சந்து பொந்து களால் விழுந்தெழும்பிப் போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஒழுங்கைகள் எல்லாம் வரதனுக்கு அத்துபடி யானவை.

'யோகம்... நான் பின்னேரமும் ரியூசனுக்குப் போகாம வீட்டில நிக்கப் போறன்' என்று அவன் கூறியபோது அவள் கண்டிப்பாக மறுத்தாள்.

'நீங்க வீட்டில இருந்தா சும்மா இருக்கமாட்டியள். மாமிக்கு விளங்காவிட்டாலும் வதனிக்கு விளங்கி விடும். கொஞ்சநாள் போகட்டும் பிறகு ஒருநாளில நில்லுங்க.' அவள் கூறுவதும் சரியாகவே பட்டது வரதனுக்கு.

தினமும் காலையில் ரியூசன் முடிந்ததும் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு யோகத்துடன்தான் பாடசாலை போவான். வரும்பொழுதும் அப்படித்தான். யோகத துக்கு இருந்த கவலைகளெல்லாம் மறைந்து விட்டன. மாமியார் பேசுவதுகூட ஒரு பொருட்டாகத் தெரிய வில்லை.

அன்று காலை வழக்கம் போல அவள் பாடசாலைக் குப் புறப்பட்டபோது வரதனும் வெளிக்கிட்டான்.

'யோகம்... உன்னோட ஆறுதலா எங்கயேனும் இருந்து கனக்க கதைக்க வேணும் போல இருக்கு' என்றான்.

'அதுதான் ஒவ்வொரு நாளும் காலமயும் பின்னே ரமும் கதைக்கிறியள்தானே.'

இப்பிடி அந்தரம் அந்தரமா கதைக்கிறதில என்ன இருக்கு யோகம். எங்கயாவது போயிருந்து ஆறுதலா கக் கதைப்பம்.'

'இன்னம் பதினைஞ்சு நிமிஷம்தானே இருக்கு பள்ளிக்கூடம் தொடங்குறத்துக்கு.'

'ஏன் யோகம் என்னோட கதைக்கிறதுக்கு உனக்கு விருப்பமில்லையே. இன்டைக்கு மட்டும் பள்ளிக்கூடத் துக்குப் போகாமவிட்டா என்ன?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்ப பள்ளிக்கூடம் விடும் வரைக்கும் என்ன செய்யுறது?'

'எங்கயேன் போவம்...'

'எங்க...'

'சாந்தி தியேட்டரில நல்ல இங்கிலீஸ் படம் ஓடுது. அங்க நமக்குத் தெரிஞ்ச ஆக்களும் வராயினம்.'

அவளுக்குப் பயமாகத்தான் இருந்தது. நீண்ட காலத்துக்குப் பிறகு படம் பார்க்கப் போகிறோமே என்ற ஆசைவேறு. அவள் தயாரானபோது அவன்தான் ஆலோசனை கூறினான்.

'ரையைக் கழட்டு யோகம்' அப்போதுதான் அவள் யூனிபோமுடன் நிற்பதை உணர்ந்தாள். நல்ல வேளை யாக வரதன் நினைவுபடுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (5)

பாடசாலை உடுப்புடனேயே படத்துக்கு அதுவும் பகல் நேரத்தில் போவதை நினைத்து பீதியுடன்தான் தியேட்டரினுள் நுழைந்தாள் யோகம்.

நல்ல வேளையாக அவர்கள் வந்தபோது 'லைற்' றுக்கள் அணைக்கப்பட்டு விட்டதால் யாருக்குமே தெரியாமல் அமர்ந்து கொண்டவளுக்கு இடைவேளை யின்போது அங்கே கண்ட காட்சி அதிர்ச்சியைத் தந் தது.

அங்கே ஜோடி ஜோடியாக இருந்தவர்கள் எல் லோருமே வெள்ளைக் கவுணில்தான் காட்சி தந்தனர்.

திடீரென அவளது பயம் மறைந்து விட்டது போலி ருந்தது. சுற்றி ஒரு தடவை நோட்டம் விட்டாள். அவ ளைப் போலவே சிலர் 'ரைகளைக்' கழற்றியிருந்தனர். சிலர் கழற்றாமலே இருந்தனர்.

'பல்கனி'யில் இருந்த அவள் எட்டிக் கீழே பார்த் தாள். எல்லாமே இளசுகள். ஒவ்வொருவர் கையிலும் மடித்துச் சுருட்டிய நிலையில் கொப்பிகள் காணப்பட்டன.

தியேட்டர்களே இவர்களை நம்பித்தான் காலையில் காட்சிகள் காண்பிக்கின்றனவோ என்று எண்ணினாள் யோகம்.

வரதனைப் பார்த்துப் பலர் சிரித்தனர். சிலர் அவ னுடன் கதைப்பதற்காக மேலேயே வந்தனர். அவர்கள் எல்லோரும் வரதனுடன் கதைத்துக்கொண்டே தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் அவள் வெட்கத்தில் குனிந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் முடிந்ததும் நகரிலுள்ள ஹோட்டலில் புரியாணி சாப்பிட்டனர். பின் மீண்டும் பாடசாலை முடியும் நேரம் வரை லைபிரரியில் இருந்துவிட்டு வீடு திரும்பினர்.

இப்போது வாரத்தில் இரண்டு நாளாவது இருவரும் படம் பார்க்கத் தவறியதில்லை.

பாடசாலையில் இருக்கும்போதும் அவளால் படிப்பில் கவனம் செலுத்த இயலவில்லை. அடுத்து எப்போது வரதனுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிக்கலாம் என்பதிலேயே கவனமாக இருந்தாள்.

சாதாரண தர பரீட்சையில் யோகம் சித்தியடையத் தவறியது மாமியாருக்குத்தான் உற்சாகமாக இருந்தது.

''இனியேன்ரி உனக்குப் படிப்பை...'' என்று சொல்லி விட்டாள்.

வரதனுடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் விடப் போகிறதே என்று எண்ணியவள் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள்.

மாமி மறுத்துவிட்டாள். அவள் பெயிலாகிய இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடுவாளா என்ன?

வீட்டு வேலைகள் எல்லாமே இப்போது யோகத்தின் தலைமேல்தான். இப்போதெல்லாம் மாமியார் வீட்டிலேயே இருப்பதில்லை. தினமும் வெளியே சுற்றித் திரிந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

மாமாவுக்கு அன்று கடை பூட்டு என்பதால் வீட்டோடு படத்திற்குப் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

வழக்கம் போல தாங்கள் திரும்பி வரும் வரை செய்ய வேண்டிய வேலைகள் பற்றி மாமியார் யோகத்துக்கு ஆணையிட்டுக்கொண்டே தன்னை அலங்கரிப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் படத்துக்குப் போகின்றார்கள் என்றதும் யோகத்துக்குக் கடந்த கால அனுபவங்கள்தான் நினைவுக்கு வந்தன.

அந்த நினைவுகளுடனேயே அன்று முழுவதும் இருக்கலாம் என்பது அவளது நம்பிக்கையாக இருந்தது.

''அம்மா... எனக்கு இண்டைக்கு ரியூசன் இருக்குது... நான் படத்துக்கு வரயில்லை'' என்றான் வரதன்.

''ஏன் மகனே... அப்ப பின்னேரம் ரெண்டு மணி சோவுக்கு வரவன். வெலிங்டன் தியேட்டருக்கு.''

''பின்னேரமும் ரியூசன் இருக்குதோ தெரியல்லை. இல்லாட்டி அங்க வாறன்.''

''கட்டாயம் வா மகனே... நாங்க படம் தொடங்கு மட்டும் வெளியால தான் இருப்பம்'' என்றாள் தாய்.

எந்த விடயத்திலுமே அக்கறைப்படாது தானும் தன் வேலையுமாகத் திரியும் வதனிக்கு அன்று என்ன யோசனை வந்ததோ தெரியவில்லை. ''அம்மா... யோகத்தையும் கூட்டிக்கொண்டு போவமே. பாவம் தானே அவள்'' என்றாள்.

தாய் பார்த்த பார்வையிலேயே மகள் பெட்டிப் பாம்பாக அடங்கிப்போனாள்.

அவளின் அந்தப் பார்வையைக் கண்டதும் வதனியின் யோசனைக்கு ஆமாப் போட வெளிக்கிட்ட மாமாவும் அடங்கிப்போனார்.

அவர்கள் புறப்படுவதற்கு முன்னேயே வரதன் புத்தகமும் கையுமாக புறப்பட்டுவிட்டான்.

''இந்தக் காலத்துப் பொடியளெல்லாம் ரியூசன்... ரியூசன் எண்டு சொல்லிப் போட்டு படத்துக்குப் போகுதுகள்...'' என்று முணுமுணுத்தவாறு தனது மகனை நினைத்து உருகினாள்.

எல்லோரும் போய் சில நிமிடங்கள் சென்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும். 'கேற்' திறபடும் சத்தம் கேட்டு ஓடிவந்து எட்டிப்பார்த்தாள் யோகம்.

வரதன் தான் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் துள்ளிக் குதித்தாள் யோகம்.

''யோகம்... உன்ன விட்டுட்டு படத்துக்கு போக எனக்கு மனம் வரயில்லை. அதுதான் ரியூசனுக்கு போற எண்டு பொய் சொன்னனான்'' என்றான்.

அவன் வந்து உடுப்பு மாற்றுவதற்குள் தேநீருடன் அவனது அறைக்குள் வந்தாள் யோகம். அவன் நிற்கும் போது இன்றுதான் அவள் அந்த அறைக்குள் வந்திருக் கிறாள்.

ஒரு கையால் தேநீர் கோப்பையை வாங்கியவாறு மற்றக் கையால் அவளை எட்டிப் பிடித்தவாறு அணைத் துக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்தான்.

ஒரு 'கப்' தேநீரை இருவரும் மாறி மாறிப் பருகினர்.

அதுவே ஒரு வகை புதிய அனுபவமாக இருந்தது யோகத்துக்கு.

''யோகம்..... ஒரு நாளும் நித்திரையே எனக்கு வருகுதில்லை. இரவில் என்னையும் உன்னையும் பிரிக் கிறதே இந்தச் சுவர்தானே... நீ எனக்கு பக்கத்தில கிடக்கேக்க எனக்கு எப்பிடித்தான் நித்திரை வரும்?''

வரதனின் அறைக்குப் பக்கத்து அறையில்தான் யோகம் தங்கும் அறை இருக்கிறது. இரண்டு அறை களையும் பிரிக்கும் சுவரில் ஒரு கதவு அவரத் தேவை களுக்குப் பாவிப்பதற்கென அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நிரந்தரமாக பூட்டப்பட்டே இருந்தது. இருவர் கட்டிலையும் பிரிக்கும் சுவரில்தான் அதுவும் இருந்தது.

''நீங்க மட்டும்தானோ... நானும்தான் நித்திர கொள் ளுறதில்லை'' என்றாள் யோகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யோகம்... இன்னும் ரெண்டு மாசத்தில் சோதினை முடிஞ்சிடும். அதுக்குப் பிறகு நான் ஒரு இடமும் போகமாட்டன். உன்னோடதான் இருக்கப்போறன்.''

அவனது வார்த்தைகள் அவளுக்குத் தேனாக இனித்தன. தன்னை மறந்திருந்தாள் அவள்.

கட்டி அணைத்து முத்தமிட்டாவன் அவளுடன் கட்டிலில் சரிந்தான்.

அவன் கட்டிலை விட்டு எழும்பியபோது அவள் மயக்கத்தில் கிடந்தாள்.

அவன் குசினிக்குள் போய் 'கீற்றரில்' தண்ணீரை வைத்துவிட்டுத் திரும்பியபோது 'சீற்'றால் தன்னைப் போர்த்தியவாறு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

''யோகம்... என்ர குஞ்செல்லே... அழாதயடி... நான் இருக்கிறன் தானே...''

அவளைத் தேற்றுவது பெரிய பாடாகப் போய்விட்டது வரதனுக்கு.

இருவரும் குசினிக்குள் சென்று தேநீர் போட்டுக் குடித்துவிட்டு மத்தியானச் சாப்பாடு சமைப்பதில் ஈடுபட்டனர்.

குசினிக்குள்ளே வந்து அதிலிருப்பதை இதிலெடுத்து வைக்காதவன் தன்னுடன் சேர்ந்து சமைக்க வந்ததே யோகத்துக்கு அரைவாசி வருத்தம் போனது போலிருந்தது.

''யோகம்... நீயும் நானும் சேந்து சமைச்சு... சாப்பிடுறதில எவ்வளவு சந்தோஷம் இருக்கு...''

அவளுக்கும் அப்படித்தான் இருந்தது.

இரண்டு மணிக் காட்சிக்கும் வரதன் படத்துக்குப் போகவில்லை.

மத்தியானம் சாப்பாடு முடிந்ததும் இருவரும் மீண்டும் வரதனின் அறைக்குள் அடங்கிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அடங்கினாலும் வரதன் விடுவானா என்ன?

வரதனுடன் சேர்ந்து பார்த்த தமிழ்ப்படங்கள் சில அவளுக்கு நினைவுக்கு வந்தன. கதாநாயகிகள் கணப் பொழுதில் தங்களை இழந்து விடுவதையும் பின்னர் வயிற்றில் ஓர் உயிருடன் காதலனால் வெறுக்கப்படு வதையும் எத்தனை படங்களில் பார்த்திருக்கிறாள்.

அப்போதெல்லாம் அந்த நாயகிகளையே குறை கூறும் யோகம் இப்போது...

கணப்பொழுதில் தங்களை இழந்து விடுவதென்பது எத்தனை தூரம் உண்மையானது என்பதை உணர்ந் தாள்.

'அத்தான் எனக்குப் பயமா இருக்குது' தடுமாறி னாள் அவள்.

''ஏன் யோகம்.. நான் இருக்கிறன்தானே'' அவள் கண்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்து விட்டவாறு கூறினான் வரதன்.

''நம்ம படங்கள்ள வாற மாதிரி நான் என்ர குழந் தையோட... இல்லை உங்கட குழந்தையோட...'' அவள் கூறிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்டவன் ''அப்பிடி வந்தா நாம மூண்டு பேரும் ஒண்டா வீட்டில இருந்து வெளிக்கிடுவம்''

ஆனந்த மிகுதியால் அவனை இருகக் கட்டி அணைத் தாள் யோகம்.

மீண்டும் இருவரும் உலகத்தை மறந்தனர். இருவரும் கட்டிலைவிட்டு எழுந்தபோது நேரம் நான்கு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. இன்னும் சில மணி நேரங் களில் மாமியார் வந்துவிடப் போவதை அறிந்ததும் உஷாரானாள் யோகம். அவள் போட்ட பட்டியல்படி தான் எதுவும் செய்யாததை உணர்ந்தவள் அவசர அவசரமாக அவற்றைச் செய்யத் தொடங்கினாள்.

வரதனுக்கு அப்போதுதான் அந்த யோசனை உதித் தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையும் யோகத்தையும் தினமும் இரவில் பிரிக்கும் அந்த சுவரிலுள்ள கதவைத் திறந்து விட்டால் இரவில் தினமும் ஒன்றாகவே...

நினைத்துப் பார்க்கவே அவனுக்கு 'ஆனந்தமாக' இருந்தது.

பழைய திறப்புக்கள் எல்லாம் ஒன்றாக வைக்கப் பட்டிருந்த மரப்பெட்டியுடன் தனது அறைக்குள் நுழைந்தவன் ஒவ்வொன்றாக எடுத்து திறந்து பார்த்தான். அந்த திறப்பைத் தேடி எடுப்பதற்கு அரைமணி நேரத்துக்கு மேலாகியது.

நீண்ட காலமாக திறக்கப் படாமலே இருந்ததால் 'கறல்' பிடித்துப் போய்விட்ட பூட்டை ஒருவாறு திறந்த பின்தான் அவனுக்கு நிம்மதி வந்தது.

கதவைத் திறந்த பின்னர் முன்னரைப் போலவே சாத்தி விட்டு திறப்பை மட்டும் மறைவிடத்தில் வைத்தான். இதையெல்லாம் யோகம் காணவில்லை.

வீட்டுக்காரர் வரும் பொழுது தான் இங்கேயே இருந்தால் ஏதும் நினைத்து விடுவார்கள் என்று எண்ணியவன் இரண்டு கொப்பிகளையும் எடுத்துக் கொண்டு சைக்கிளில் ஏறி புறப்பட்டான்.

'கெதியா வந்திடுங்க அத்தான்'' என்றாள் யோகம்.

* * *

இரவு வெகுநேரம் வரை வரதனின் அறையில் லைற் எரிந்து கொண்டிருந்தது.

மேசையில் புத்தகத்தை விரித்து வைத்துவிட்டு எப்போது வீட்டுக்காரர் படுப்பார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

படத்தைப் பற்றியே தாயும் மகளும் விமரிசனம் செய்து கொண்டிருந்தனர். அவர்களது விமரிசனம் நின்ற சில நிமிடங்களிலேயே தாயாரின் குறட்டைச் சத்தம் கேட்டது.

எழுந்து சென்று தனது அறைக் கதவுக்குத் தாள் பாள் போட்டுக் கொண்டவன் ஓசை கேட்காமல் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையையும் பிரிக்கும் சுவரிலுள்ள அந்தக் கதவைத் திறந்தான். கட்டிலில் இருந்து திடுக்கிட்டு எழுந்தாள் யோகம்.

உறக்கமின்றி கட்டிலில் கிடந்தவாறு முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்குத் திடீரென்று கதவு திறபட்டபோது சுவரே விழுந்தது போலிருந்தது.

உள்ளே வந்த வரதன் யோகத்தின் அறை முன்கதவுக்கும் உட்பக்கமாகத் தாள்பாள் போட்டு மூடினான்.

யோகத்திற்கு நினைக்கப் பயமாக இருந்தது. வரதனே அறை யன்னல்களையும் பூட்டிவிட்டு அவளுடன் சென்று தனது அறையிலேயே படுத்தான்.

''யோகம் எனக்கு ஏதும் செய்யவேணுமெண்டில்லை உன்னோட சும்மா படுத்துக்கிடகிறதுக்கே எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?'' மெல்ல முணுமுணுத்தான்.

அன்று இரவு இருவரும் விரைவாகவே தூங்கிவிட்டனர். இருவரும் பகல் முழுவதும் அளவுக்கதிகமாக வேலை செய்திருந்ததால் களைத்துப் போயிருந்தனர். யோகத்துக்கு மனதில் இருந்த பயம் நித்திரையை அனுமதிக்கவில்லை. வரதன்தான் முதலில் நித்திரையானான்.

அவன் பகலில் நடந்து கொண்டது போல இரவிலும் செய்வதற்காகத்தான் தன்னை இங்கே அழைத்து வருகிறான் என்று நினைத்திருந்தவளுக்கு அவன் பேசாமல் படுத்து விட்டது அவன் மேல் ஏதோ ஒரு நம்பிக்கையைத் தந்தது.

அந்த நம்பிக்கையில்தான் அவளும் உறங்கி விட்டாள்.

நான்கு மணிக்கு மணிக்கூடு அலறியது. எழுந்த சென்று அலாமைத் தட்டிவிட்ட வரதன் யோகத்தையும் எழுப்பி அவளது அறைக்கு அனுப்பிய பின் அந்தக் கதவை முன்னரைப் போல பூட்டிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதனின் படுக்கை அறை இப்போதெல்லாம் புதுத் தம்பதிகளின் பள்ளியறையாக மாறிவிட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வீடே அமளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஞாயிற்றுக்கிழமை என்றாலே அப் படித்தான். மாமாவும் கடைக்குப் போக மாட்டார். விதம் விதமான சாப்பாடுகளைச் செய்வதில் மாமி அன்றுதான் அக்கறை காட்டுவாள். யோகம் ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருப்பாள். அவளைப் பொறுத்த வரையில் இந்த ஞாயிற்றுக் கிழமையே வராமல் விடாதா என்றுதான் நினைப்பாள்.

குசினியில் வேலை செய்து கொண்டிருந்த யோகம் வெட்டிய மரம் ஒன்று சரிந்து விழுந்தது போல திடீ ரென விழுந்தாள்.

பதறிப் போனாள் மாமி. அவள் விழுந்து விட் டாளே என்பதைவிட சமையல் வேலைகளெல்லாம் தடைப்படப்போகின்றது என்பதே அவளுக்கு கூடுத லான கவலையாக இருந்தது.

தனக்குத் தெரிந்ததையெல்லாம் செய்து பார்த்தாள். அவளை எப்படியும் எழுப்பி விட வேண்டும் என்பதில் அவளுக்கு அத்தனை அக்கறையாக இருந்தது.

யோகத்துக்கு அறிவு திரும்புவதாக இல்லை. வேறு வழியில்லாமல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகத் தயா ரானாள்.

கணவனுடன் அனுப்பினால் அவன் காசைக் காசெண்டு பாராமல் செலவழித்து விடுவான் என்ற பயம் அவளுக்கு தானே காரில் யோகத்துடன் புறப்பட் டாள்.

நீண்ட நேரமாகப் பரிசோதித்த டாக்டர் மாமியைத் தனியே அழைத்து விஷயத்தைக் கூறினார்.

துடித்துப் பதறினாள் மாமி.

கார் வீட்டு கேற்றில் நின்றதும் யோகம் ஒரு பக்கக் கதவால் திறந்து கொண்டு உள்ளே போனாள். பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் வந்த மாமி எட்டி அவள் தலை மயிரைப் பிடித்து 'நாயே.. என்ர குடும்ப மரியாதையைப் பறக்க விட்டிட்டியேடி' என்றவாறு படபடவென அடித்தாள்.

முற்றத்தில் நின்ற மாமா ஓடிவந்தார். மயக்கமுற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனவளுக்கு இப்படி அடிப்பதைப் பார்த்ததும் அவருக்கு எதுவும் புரியவில்லை.

'மூதேவி... நாயே...' வாயில் வந்ததையெல்லாம் கூறி திட்டினாள் மாமி. பத்திரகாளி போல அவள் தோற்றமளித்தாள்.

எதையும் ஒரு சீரியஷாக எடுக்காத மாமாகூட பதறிப் போனார். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை.

'யாரடி அவன்...? இனியாவது சொல்லித் துலையன்...'

இனியும் ஏன்தான் தயங்கவேண்டும் என்று யோகத்தின் மனம் சொல்லியது. இனியும் மறைப்பதில் அர்த்தமில்லை என்று நினைத்தவளாக நிமிர்ந்து மாமனையும் மாமியையும் பார்த்தாள்.

'ஆரடி சொல்லன்...' மாமி தான் அதட்டினாள்.

'வ...ர...தன் தான் ...' அழுதழுது கொண்டே கூறினாள்.

டாக்டர் சொல்லிய செய்தியைவிட இந்தச் செய்தியே மாமிக்கு உறைப்பைத் தந்திருக்க வேண்டும்.

'என்னடி செய்யிறதையும் செய்து போட்டு என்ர புள்ளயிலையா பழியைப்போடறாய்...' அவள் நம்புவதாயில்லை. எந்தத் தாய்தான் தனது பிள்ளையைத் தவறானவன் என்று கூறுவாள். அதுவும் இவள் பாவி.

வரதன் அப்போது வீட்டில் இல்லை. அவன் வரும் வரைக்கும் பொறுக்குமாறு சமாதானம் கூறினார் மாமா. இந்த ஒரு விடயத்தில் தான் மாமாவின் சொல் ஏறியிருப்பதாகத் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தில் வெளியே போன மாமி சில நிமிடங்களில் திரும்பி வந்தாள்.

அவள் வந்ததும் வராததுமாக சைக்கிள் ஒன்று வரும் சத்தம் கேட்டது.

'டேய்... வரதன்... இதுக்குத்தானாடா உன்ன இப் பிடி வளத்தனான். ராஷ்கல் என்ன வேலையடா செய் திருக்கிறாய்?' கத்தினாள் மாமி.

'யோகம்...' என்ற மாமியின் குரல் கேட்டு ஹோலுக்கு வந்தாள் யோகம்.

ஒன்றும் அறியாதவன்போல திரு திருவென்று முழித்துக் கொண்டிருந்தான் வரதன்.

'கழுதை... நாயே... கேட்டதெல்லாம் வாங்கித் தந்து உன்னை ராசா மாதிரி வைச்சிருந்தனேடா...'

'என்ன அம்மா... உங்கபாட்டுக்கு கத்திக் கொண் டிருக்கிறீங்க...'

'என்னடா செய்யுறதையும் செய்து போட்டு...'

'இப்ப நான் என்னத்தைச் செய்து போட்டன் எண்டு இப்பிடிக் கத்துறியள்...'

அவன் கூறிய வார்த்தைகள் யோகத்தின் இதயத்தைப் பிழிவது போலிருந்தது, எத்தனை கற்பனைகளுடன் நாட்களைக் கழித்திருப்பாள் யோகம்.

வரதனின் நடிப்புக்கு 'சபாஷ்' சொல்லிக் கொண்டி ருந்தாள் மாமி. வரதன் தவறாக நடந்திருப்பானோ என்ற பயம் அவளது மனதில் இருந்ததால் தானே, அவன் வீட்டுக்கு வருமுன்னர் றோட்டில் போய் நின்று அவனிடம் அறிந்தாள்.

வரதன் ஓம் என்று தாயிடம் கூறியதும் 'டேய் விசரா நீ அப்படி நடந்திருந்தாலும் என்னட்டச் சொன்ன மாதிரி வேற யாருக்கும் சொல்லிப் போடாத. வீட்ட வைச்சு நான் கேக்கேக்க இப்பிடிச் சொல்லு...' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள், எப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்றும் அவனிடம் கூறியிருந்தாள்.

தான் கூறியது போலவே வரதனும் சொன்னதை நினைத்து அவனை உள்ளூர பாராட்டினாள் மாமி.

மாமா என்ன செய்வதென்று அறியாமல் ஹோலுக்குள் அங்குமிங்குமாக உலாத்திக் கொண்டிருந்தார்.

எல்லோரும் தூங்கிய பின்னர் வேறுவழியின்றி புறப்பட்டுவிட்டவள்தான் யோகம் —

யோகத்தின் கடந்த கால நினைவுகள் மனதில் திரைப்படமாகி சில கணங்களில் மறைந்தன.

மோகன் பேராதனைக்குப் போய் ஒருவருடம் ஓடி மறைந்துவிட்டது.

முதலாண்டு பரீட்சை முடிந்து 'வக்கேஷனில்' அன்று ஊருக்கு வர இருப்பது பற்றி ஏற்கனவே அறிவித்திருந்ததால் யோகம் உற்சாகமாக செயற்பட்டுக் கொண்டிருந்தாள்.

வைரவர் கோவிலடியில் பஸ் வந்து நின்றபோது தூரத்தே கண்டு விட்டவள் ஓட்டமும் நடையுமாக வந்து மோகனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள்.

இருவரும் சில நிமிடங்கள் பாச மழையில் உலகத்தை மறந்து நின்றனர்.

வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது தான் கூறினாள்.

''தம்பி... உன்ர மாமி வதனியும் அவவின்ர மகளும் வந்திருக்கினம்...''

''மாமியா...''

அவன் நிமிர்ந்து தாயைப் பார்த்தான்.

''தம்பி... நான் சின்னவயசிலயே தாய் தகப்பனை பறிகொடுத்தபிறகு என்னை அரவணைத்தது இந்த வதனி குடும்பம்தான்... உன்ர அப்பாவோட இவைக்கும் சொல்லாமாத்தான் வெளிக்கிட்டனான்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் வீட்டையடைந்ததும் வதனியும் மகளும் எழும்பி நின்று வரவேற்றனர்.

அவனுக்கு எல்லாமே புதிய செய்திகளாக இருந்ததால் எதுவுமே புரியவில்லை.

''மோகன்... எங்கட வீட்டில இருந்து யோகம் போனபிறகு நாங்க தேடாத இடமில்லை... இருபத்தைஞ்சு வருஷத்துக்குப் பிறகெண்டாலும் நல்ல வேளையா உன்ர மாமா பாங்கில யோகத்தைக் கண்டிட்டார்...'' என்றாள் வதனி.

அவனுக்கு இப்போதுதான் நிலைமை புரிந்தது.

தன்னை வளர்த்த மாமாவுக்கே சொல்லாமல் வீட்டை விட்டுப் புறப்பட்ட யோகத்தால் கணவனை இழந்த பின்னர் மீண்டும் அங்கே போக அவளுக்கு தன்மானம் இடம் தரவில்லை என்பதை நினைக்க மோகனுக்கு பெருமையாக இருந்தது.

தனக்கும் உறவினர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்தபோது அவனால் இருப்புக் கொள்ள முடியவில்லை. அவர்களுடன் நீண்டநேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டு நாகம்மாக்காவை காணப் புறப்பட்டான்.


நாகம்மாக்கா வீட்டுக்கு அவன் போய்ச் சேர்ந்தபோது எங்கோ புறப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்.

''வா... வா மோகன் எப்பவந்தது...'' என்று வரவேற்றாள்.

சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டு புறப்பட்டபோது 'வாவன் மோகன் போற வழிதானே வீட்ட விட்டுட்டுப் போறன்' என்று நாகம்மாக்கா கேட்ட போது அவன் 'இல்லையம்மா... நான் வாசிகசாலையடிக்குப் போகவேணும்' என்றவாறு நடந்தான்.

அவன் வாசிகசாலையடிக்கு போய்ச் சேர்ந்த போது வழக்கம் போல சனம் கூடிவிட்டது. ஊர் நியாயங்களை அலசிக்கொண்டிருந்தனர். மோகனைக் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் 'வாங்க டொக்ரர்... எப்ப வந்தது' என்றான் ஒருவன். ஒவ்வொருவரும் மாறி மாறிக் கேள்விகள் கேட்டனர். அந்தஸ்தில் ஒரு படி உயர்ந்து விட்டதாகத் தான் அவன் கருதிக் கொண்டிருந்தான். ஆனால் அந்தக் கிராமத்தவர்கள் அப்படி கருதுவதாகத் தெரியவில்லை.

அவனை ஓர் அந்நியன் போலவே இப்போதும் நடத்தியது கிராமம்.

வாசிகசாலையில் நிற்கவே அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அன்றைய பேப்பர்களைப் படபடவெனத் தட்டிப் பார்த்து விட்டுப் புறப்பட்டான்.

அவன் வீட்டுக்கு போய்ச் சேர்ந்தபோது, வீட்டில் இப்போது வேறொருவரும் கூடியிருந்தார். வதனி மாமிதான் அவரை அறிமுகம் செய்து வைத்தார். அவனுக்கு அவரை நன்கு தெரியும். வங்கி மனேச் சராகத் தான் மோகனுக்கு அவரைத் தெரியும். ஆனால் அவர் தனது மாமா என்பது இப்போதுதான் தெரிந்தது.

வதனி மாமியை திருமணம் செய்யும் முன்னரே அவர் தூரத்து உறவாம். போய்ச் வங்கியில் காசு போடுவதற்காக போனபோதுதான் அவர் அவளை சந்தித்தார். இதன் பின்னர்தான் யோகம் இங்கு இருப்பது தெரிந்ததாம்.

வதனிதான் எல்லாவற்றையும் கூறினாள்.

வங்கிக்கு முதல் தடவையாக போனபோதே அவர் யோகத்தை அடையாளம் கண்டு விட்டார். மகன் 'மெடிக்கல் கொலிஜ்சி'ல் படிக்கிறான் எண்டு மட்டும் சொல்லாமல் விட்டிருந்தால் அவர்கள் அங்கு வந்தி ருக்கவே மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியவா போகிறது.

வதனி மாமாவும் மத்தியானம் இவர்களுடன் சாப் பிட்டு விட்டு போய்விட்டார். பின்னேரம் வேலை முடிந்து போகும் போது வந்து கூட்டிப் போவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு. தங்களுடன் வீட்டுக்கு யோகத்தையும் மோக னையும் கூட்டிக் கொண்டு போக வதனி விடாப் பிடியாக நின்றாள்.

'நான் வேறொரு நாளைக்கு வாறன் மோகனைக் கூட்டிக் கொண்டு போங்க...' என்றாள் யோகம்.

தனக்குப் பிறகு மோகன் அநாதையாகிவிடக் கூடாது என்பதில் தான் அவளது கவனம் இருந்தது. வரதன் தனக்குச் செய்தவையெல்லாம் அவளுக்கு இப் போது பெரிதாகத் தெரியவில்லை. வரதனுடன்தான் வாழ்ந்திருந்தால் மோகன் இப்பிடியொரு உயர்ந்த நிலைக்கு வந்திருக்க மாட்டான் என்றே அவளது மனம் சொன்னது.

தனது மகனை இந்த நிலையில் காண்கின்றபோது அவர்கள் செய்ததெல்லாம் அவளுக்கு ஒரு கனவாகவே இருந்தது.

இப்போதெல்லாம் மோகனும் அநாதையாகி விடக் கூடாது என்பதே அவளது கவலையாக இருந்தது. அது தான் அவனை மட்டும் அவர்களுடன் செல்லுமாறு கூறினாள்.

மாலை அவர்கள் புறப்படும் போது மோகன் எவ்வளவோ மறுத்துப் பார்த்தான். அவர்கள் விடுவ தாக இல்லை. யோகமும் கூடவே அவர்களுடன் சேர்ந்து விட்டதால் அவனால் மறுக்க முடியவில்லை.

திருநெல்வேலிக்கு இரண்டு பஸ் மாறி அவர்கள் போய்ச் சேர்ந்த போது நன்றாக இருட்டி விட்டது.

'மோகன்... இவதான் எங்கட அம்மா.'' அந்த வராந்தாவில் தொங்கிக் கொண்டிருந்த படத்தைக் காட்டி ''இவர்தான் அப்பா...'' என்றாள் வதனி மாமி.

மோகனை கட்டி அணைத்தாள் அவளது தாய். யோகத்தின் வாழ்க்கையை நாசமாக்கியதற்காக வேத னையை அனுபவித்தே மாய்ந்தவளல்லவா அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தை வீட்டை விட்டுத் துரத்திய பழிதானே அவளையும் இளம் வயதிலேயே விதவையாக்கியது.

கண்களைத் துடைத்தவாறு 'அம்மா எங்க... வர யில்லையா?' என்றாள். ''அவ பிறகு ஒரு நாளைக்கு வருவா...'' என்றான் அவன்.

மோகன் வீட்டைச் சுற்றி ஒரு தடவை நோட்டம் விட்டான். நாகரிகத்தின் மொத்த உருவாக காட்சி தந்தது வீடு. ஹோலில் நிற்கவே அவனுக்கு கால்கள் கூசின.

இல்லை என்று சொல்லுவதற்கு அங்கே எதுவு மில்லைபோல தெரிந்தது.

''வா மோகன் உள்ளபோய் உடுப்ப மாத்து'' என்றாள் வதனி மாமி.

இரவு எல்லோரும் சாப்பிட்டுவிட்டு வந்து ஹோலில் அமர்ந்தனர். டி.வி. ஓடிக்கொண்டிருந்தது.

''கலா இஞ்ச வாம்மா ஏதும் நல்ல படமிருந்தாப் போட்டுவிடன்.'' வதனி மாமி மகளை அழைத்தாள். அறைக்குள்ளிருந்து வெளியே வந்தவளைக் கண்டதும் அவனுக்கு இரத்தமெல்லாம் உறைவது போலிருந்தது.

மெல்லிய அந்த 'நைற்றி'யில் அவளைப் பார்த்த போது யாருக்குத்தான் அப்படி இருக்காது.

கசெற் ஒன்றை எடுத்துப் போட்டுவிட்டு அவளும் வந்து முன்னால் அமர்ந்துகொண்டாள்.

எல்லோரும் படுக்கப் போனபோது இரவு பன்னி ரண்டு மணிக்கும் மேலாகிவிட்டது. மோகன் படுப்பதற் கென்று ஏற்பாடாகி இருந்த அறைக்குள் கொண்டுவந்து அவனை விட்டு விட்டு '' அடுத்த அறையிலதான் நான் கிடப்பன் இந்தக் கதவைத் திறந்துபோடக் கூடாது'' சிரித்தவாறு கூறியபடி வெளியேறினாள் கலா.

வீட்டில் திரும்பிக் கூடத் தன்னைப் பார்க்காதவள் இவ்வளவு கலகலப்பாக தன்னுடன் பழகுவதைப் பார்க்க அவ!னுக்கு ஆச்சிரியமாக இருந்தது. பல வருடங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகியவள் போல கலா பேசியது ஏதோ மாதிரியாகப் பட்டது.

'வக்கேஷன்' முழுவதும் சந்தோஷமாகக் கழிந்தது அவனுக்கு. பலதடவை திருநெல்வேலிக்கும் போய் வந்தான்.

போரதனைக்குப் புறப்பட்டபோது ரயில் நிலையத்துக்கு வதனி மாமியும் கலாவும் வந்திருந்தனர். அவர்களுடன் வந்திருந்தவர் காரைக் கொண்டுபோய் 'பாக்' பண்ணி விட்டு நடந்து 'பிளாட்போம்' நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"அவர்தான் நான் செல்லுவன் வரதன் அண்ணரெண்டு" வதனி மாமி முடிப்பதற்குள் அவரும் அருகே வந்துவிட்டார்.

வரதனுக்கு மோகனைப் பார்க்க வேண்டுமென்று' அவர்களைப் பற்றி வதனியின் கணவன் கூறியதிலிருந்து ஓர் ஆவல் இருந்தது. ஆனால் மோகனுக்கு யோகம் எல்லாவற்றையும் சொல்லி இருந்தால் தன்னை அவன் அவமானப் படுத்தி விடுவானே என்ற பயம் அவரது ஆசைக்குத் தடை விதித்தது.

"...எங்களாலதான்" தமையன் கூறியது வதனியின் காதில் அறைந்தது போலிருந்தது. மனதுள் தாயைத் திட்டிக் கொண்டாள்.

மோகனைக் கட்டிப் பிடித்து முத்தமிட வேண்டும் போலிருந்தது. "இத்தனை வருசமாய் நாமெல்லாம் இப்படி வாழ வேண்டியாதாப் போச்சுது... எல்லாம் எங்களாலதான்" கண்களில் வடிந்த கண்ணீரை துடைத்து விட்டுக் கொண்டு கூறினார் வரதர்.

"...எங்களாலதான்" தமையன் கூறியது அவள் காதில் அறைந்தது போலிருந்தது. மனதுள் தாயைத் திட்டிக் கொண்டாள்.

புகையிரத நிலையத்திலிருந்து அவர்களைப் பிரிந்த போது பாசமழையில் நனைந்துவிட்டான் மோகன். புகையிரதம் மறையும் வரை மூவரும் கையசைத்தபடி நின்றனர். அவனும் யன்னலால் எட்டிப் பார்த்தபடி கையை அசைத்தவாறு சென்று கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி ஆண்டுப் பரீட்சை முடிந்துவிட்டது. மாண வர்களெல்லாம் அமளிப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இத்தனை நாளாக ஒருமித்து வாழ்ந்த குடும்பம் ஒன்று ஆங்காங்கே பிரிந்து போகப் போவது போல இருந்தது. எல்லோர் முகத்திலும் சோகக்களை. பேராதனைப் பல் கலைக்கழகத்திலும் கண்டி ஆஸ்பத்திரியிலும் கழிந்த அந்த நாட்ளை நினைக்க எத்தனை கதைகள் பேசின.

ஒவ்வொருவர் வாழ்விலும் எத்தனை அனுபவங்கள்.

எப்போதும் தனித்தே இருக்கும் மோகன்கூட காணு கின்ற ஒவ்வொருவரையும் மறித்து மறித்துக் கதைத்துக் கொண்டிருந்தான். பல்கலைக்கழக வாழ்க்கையில் சோடி சேர்க்காத ஒரு சிலரில் மோகனும் ஒருவன்.

பல்கலைக்கழகம் சென்றுவிட்டால் தத்தமக்கென ஒருத்தியைத் தெரிவு செய்துவிடவேண்டும் என்பது கட்டாயமான ஒன்று என்று சிலர் கருதுமளவிற்கு அந்தப் பழக்கம் மாறிவிட்டிருந்தது. இல்லையெனில் ஏதோ கௌரவக் குறைவாகவே சிலர் கருதினர்.

அப்படிச் செய்யாவிட்டால் கௌரவக் குறைவு என்று கருதும் அந்தக் குறையைக்கூட மானசீகமாக ஏற்றுக் கொள்ளவும் மோகனைப் போன்ற சிலர் தயா ராக இருந்தனர்.

அவளும் ஒரு டாக்டராக வரப் போகின்ற போதிலும் அவளின் வீட்டிலுள்ள 'இருப்பு' அறிந்து தொடர்ந்து அவளைக் காதலிக்கத் தயாராக இருந்தனர் சில யாழ்ப் பாணத்து மாணவர்கள்.

யாழ்ப்பாண ரயில் நிலைத்தில் மோகன் இறங்கிய போது வதனி மாமியும் கலாவும்தான் வரவேற்றனர்.

எல்லாவற்றையும் காரில் ஏற்றிக்கொண்டு புறப் பட்டபோது தான் "மோகன்... வீட்ட போயிற்றுப் போவம் என்ன" என்றாள் மாமி.

"இல்லை மாமி இப்ப அம்மாட்டப் போயிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு பின்னேரம் அல்லது நாளைக்கு வருவம்'' என்றான் மோகன்.

கார் வைரவர் கோயிலடியில் போய் நின்றபோது சத்தம் கேட்டு யோகம் ஓடிவந்தாள். வழக்கம்போல வரவேற்புக்கள் நடந்தேறின.

மாலை வதனி மாமியுடன்போவதற்கு முன் நாகம்மாக்கா, அதிபர் ஆகியோரையும் சந்திக்க அவன் தவறவில்லை.

நாகம்மாக்கா இப்போதெல்லாம் நன்றாக இளைத்துப் போயிருந்தா.

எவ்வளவுதான் பணம் இருந்தென்ன வயதைப் பிடித்திழுக்க முடியுமா என்ன?

''இனி என்னம்மா நான் உங்களோடதானே இருக்கப்போறன்'' ஆறுதலளித்தான் மோகன்.

பரீட்சை முடிவுகள் வெளிவந்தபோது முதல்தரத்தில் அவன் சித்தியடைந்ததை விட யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வேலை கிடைத்தது தான் பலருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஆனால் மோகனுக்கு மட்டும் அதில் எள்ளளவும் விருப்பமிருக்கவில்லை. அவன் என்ன தான் பெரிய டாக்டரானாலும் அவன் வாழும் இந்தச் சமூகம் அவனை இன்னும் மனிதனாக ஏற்றுக் கொள்ளவில்லையே.

துணையின்றி அவலப்பட்ட தனது தாய் துணை தேடினாள். திருமணம் முடியாவிட்டாலும் மானசீகமாக ஏற்றுக் கொண்ட கணவனுடன் உறவு கொண்ட அவள், விதவையாக வேண்டி ஏற்பட்டது. அது அவளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையாவும் இருக்கலாம். ஆனால் அதற்காக இந்தச் சமூகம் அவளுக்குக் கொடுத்த தண்டனை அளவுக்கதிகமானது தான். அவள் செய்துவிட்ட தவறை மன்னித்து வாழ்வளிக்க இந்தச் சமுதாயத்தில் முதுகெலும்புள்ள ஒருவனாவது முன்வரவில்லையே என்பதை நினைக்க நினைக்க இந்தச் சமூகத்தின் மீதே அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருந்துதான் தினமும் வேலைக்குப் போய் வந்தான் மோகன். வதனி மாமி தங்கள் வீட்டிலிருந்து வேலைக்குப் போகுமாறு வற்புறுத்தியும் கூட அவன் மறுத்து விட்டான். தாய்க்குத் தான் செய்யவேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றன என்று கருதினான் அவன்.

யோகத்துக்கும் மோகனுக்கும் உதவுவதில் எப்போதும் குறிபார்த்துச் செயற்படும் நாகம்மாக்கா இப்போதும் பின்னிற்கவில்லை.

நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள அவரது மாடிவீடு கூலி ஆட்கள் மூலம்தான் பராமரிக்கப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணத்திலும் ஒரு வீடு இருக்க வேண்டு மென்பதற்காகவே கட்டிய அந்த மாடிவீட்டை பரா மரிப்பதற்கென்றே இருவர் வேலைக்கமர்த்தப் பட்டிருந்தனர்.

பிறந்த வீட்டிலேயே கடைசி காலத்தைக் கழிக்க வேண்டுமென்று நாகம்மாக்கா ஊரிலேயே வசித்து வந்தார்.

மோகனும் தாயும் அந்த மாடிவீட்டில் குடியேறி விட்ட போதிலும் அங்கு வேலை செய்து வந்த இரு வேலையாட்களும் இன்னமும் அங்குதானிருந்தனர்.

யோகம் எவ்வளவோ சொல்லியும் நாகம்மாக்கா கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

''யோகம்... உன்ர மனதிலை நல்ல தெம்பு இருக்கு தெண்டு எனக்கு நல்லாத் தெரியும். ஆனா அது உடம் பில இல்லை...''

நாகம்மாக்காவை எதிர்க்கும் தைரியம் யோகத்துக்கு வரவா போகிறது. அவள் அடங்கிப் போனாள்.

நல்லூர் குறுக்கு வீதியில் அந்த வீட்டை அடை யாளம் காண்பதற்கு நம்பரைத் தேடி அலைய வேண் டியதில்லை. அந்த வீதியிலேயே ஒரு தனித்துவத்துடன் கட்டப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் சோமசுந்தரம் எம்.பி.பி.எஸ்., எப்.ஆர்.ஸி.எஸ் பெயர்ப்பலகை வேறு முன்னால் வீட்டுச் சொந்தக் காரரின் பெயர் சொல்லிக் கொண்டிருந்தது.

நாக்ம்மாக்காவின் ஒரே மகள் ரஞ்சினியின் சீதன வீடு அதுதான் என்பதால் அவர்கள் திருமணமான புதிதில் அங்கே தான் சில காலம் இருந்தார்கள். அப்போது போட்ட அந்த பெயர்ப்பலகை இன்னமும் அப்படியேதானிருந்தது.

அந்த வீட்டில் முன்னர் எப்போதுமில்லாதவாறு புதியதொரு கலகலப்பு.

அடிக்கடி வதனி மாமியும் கலாவும் வந்து போனார்கள். ஆனால் வரதன் மாமா மட்டும் அவன் பலதடவை அழைத்த போதிலும் ஒரு தடவைதானும் வரவில்லை.

''மாமி... இந்த 'வரதரை' என்னால் புரியவே முடியுதில்லை. என்னைக் கண்டுட்டா மட்டும் எப்படியெல்லாம் துடிக்கிறார் ஆனா ஒரு தடவையெண்டாலும் வீட்ட வர...''

மோகன் ஒரு நாள் வதனி மாமியிடம் கேட்டேவிட்டான்.

''அவருக்கு எங்க தம்பி நேரமிருக்கப்போகுது...'' யோகம் தான் முந்திக்கொண்டு பதிலளித்தாள்.

''காலையில் விடிய கடைக்குப்போனா இரவில தான் கடையில இருந்து வெளிக்கிடுவார்.... அவர் அப்பிடித்தான் மோகன், எங்கட வீட்டயும் ஏதும் விசேஷமெண்டாத்தானே வாறவர்...'' — இது கலா.

அவர் எந்த முகத்தோடயடா யோகத்தை காணுவார்... என்று சொல்லவேண்டும் போலிருந்தது வதனிக்கு.

அவள் மௌனமாகவே இருந்து விட்டாள்.

''தம்பி... உன்னோட ஒரு முக்கியமான விசயம் கதைக்க வேண்ணும்...'' இருவரும் போனபின்னர் தான் யோகம் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னம்மா....'' என்றவாறு எதிரே வந்து நின்றான் மோகன்.

''தம்பி... நான் நல்ல சந்தோஷமாகத்தான் இப்ப இருக்கிறன். எவ்வளவுதான் சந்தோஷமிருந்தாலும் உடலில தெம்பு குறைஞ்சுகொண்டே போகுது...''

அருகே வந்து தாயின் தோளில் தட்டிக் கொடுத்தவாறே ''அதுதானே அம்மா வீட்டில சும்மா இருங்க கண்டபடி வேலை செய்யாதேங்க எண்டு சொல்லுறனான்'' என்றான் மோகன்.

''தம்பி... உன்னை சுமந்துகொண்டு நான் மாமி வீட்டிலேயே இருந்திருந்தா நிச்சயம் உன்னை இந்த நிலைமையில நான் பாத்திருக்கவே ஏலாது. நீ இப்ப வரதன் மாமாவின்ர கடையில தான் வேலை செய்து கொண்டிருப்பாய். அந்தக் கடை யின்ர முதலாளியா நீ இருந்தாக்கூட இப்ப எனக்கு இருக்கிற மன நிறைவு அதால ஏற்படாது. நான் இப்பயெல்லாம் நினைக்கிறது என்ன தெரியுமா.... உன்ர அப்பா கூட எனக்கு உதவிதான் செய்திருக்கிறார்...''

யோகம் இடையிடையே கண்களைத் துடைத்துக் கொண்டாள். மோகன் எதுவுமே கூறவில்லை. அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தான்.

யோகம் தான் கூறவந்ததை கூறி முடிப்பதற்குள் ஒரு பிரசங்கமே நடத்தி முடித்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி.... கலா உனக்கு ஏத்தவதான்... நானும் போயிற்றா உனக்கு அவயவிட்டா வேற ஆரு இருக்கினம்...''

தனக்கு விருப்பமோ இல்லையோ யோகத்தின் விருப்பத்துக்கு மோகன் குறுக்கே நிற்கவா போகிறான்.

திருமணத்துக்கு நாள் வைத்தாகியும்விட்டது.

யோகம் முன்னரைவிட சற்று குதூகலமாகவே காணப்பட்டாள். இப்படியே விட்டுவந்தால் வரதன் தான் அவனது தகப்பன் என்பது மோகனுக்கு தெரிய வந்துவிடுமோ என்ற பயம் அவள் மனதில்...

அந்த இரகசியம் மட்டும் மோகனுக்கு தெரிந்துவிட்டால் அவனை சமாதானப்படுத்த தன்னால் முடியாது என்பது அவளுக்கு தெரியாததா என்ன?

நாகம்மாக்காவும் அடிக்கடி வந்து திருமண ஒழுங்குகளை கவனித்துக்கொண்டதால் யோகத்துக்கு சிரமம் இருக்கவில்லை.

வதனியின் வீடு அலங்காரங்களால் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. ஓடி ஓடி ஒவ்வொரு அலுவல் களாக கவனித்துக்கொண்டிருந்தார் வரதர்.

மணமகனை அழைத்துவர போனவர்கள் வரும் நேரம் நெருங்க நெருங்க அங்கே எல்லோர் செயலிலும் ஒரு அவசரம் தெரிந்தது.

மாப்பிள்ளையும் மணவறையில் அமர்ந்தாகிவிட்டது. யோகம் அமைதியாய் வந்து மணவறையின் பின்னால் - மகனுக்கு பின்னால் நின்று கொண்டாள். வேறு எவரையும் பார்க்க அவள் விரும்பவில்லை. நாகம்மாக்காதான் மாப்பிள்ளை வீட்டாரில் முக்கிய மானவராக ஓடி ஓடி அலுவல்களை கவனித்தார்.

''பொம்பிளையை கூட்டிக்கொண்டுவாங்க...'' என்று பூசகருக்காக குரல் கொடுத்த நாகம்மாக்கா கல்யாணப்பந்தலின் வாசலில் நிற்பவர்களை கண்டதும் ஆச்சரியத்துடன் அவர்களை நோக்கி ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ரஞ்சினி...'' என்றவாறு அவள் கட்டி அணைத்த போது ''அம்மா...'' என்றவாறு மகள் ஆனந்தத்தில் திளைத்திருந்தாள்.

''ஏன் ராசாத்தி... நீ வாறதா ஒரு வார்த்தை எழுதக்கூடாதா...''

''இல்லை அம்மா.. இந்த லீவுக்கு அவற்றை தங் கச்சியட்ட அவுஸ்ரேலியாவுக்குத்தான் போக இருந்தம் போற வழியில உங்களைப் பாத்திற்றுப் போவம் எண்டு வெளிக்கிடுகிறதுக்கு முதல் நாள்தான் யோசிச்சனாங் கள். நேரவீட்ட போனபோதுதான் இந்த விசயம் தெரிஞ்சுது. உடன வந்திற்றன்...''

நாகம்மாக்கா மகளுடன் மணவறையை நோக்கி வர மணப்பெண்ணும் அங்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

வரதனும் அவர் மனைவியும்தான் மோகனின் தந்தை-தாய் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து கொண்டிருந்தனர். வரதனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்த ரஞ்சினி ''மோகன்... எழும்படா..''

என்று கத்தினாள்.

மோகன் அதிர்ச்சியுடன் எழுந்திருக்க பின்னால் நின்ற யோகம் ஓடிவந்து ரஞ்சினியின் கைகளை பற்றினாள்.

யோகத்தை இழுத்துக்கொண்டு வரதனுக்கு அருகே வந்த ரஞ்சினி ஆவேசத்துடன் அவனைப்பார்த்தாள்.

''மிஸ்ரர் வரதன்.... மோகன் ஒரு டாக்டராகின பிறகு எப்பிடியோ தேடிக்கண்டுபிடிச்சு மாப்பிள்ளை யாக்கிவிட்ட உங்களுக்கு இப்பயாவது அவன் உங்க பிள்ளைதான் எண்டு சொல்ல மனம்வரயில்லை.... சீ.. நீங்களெல்லாம் ஒரு மனுசர்...''

அந்தச் செய்தி மோகனுக்கு மட்டுமென்ன கூடி நின்ற அனைவரையும் அதிரவைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்ரி... என்ன சொல்லுறீங்க...'' என்றான் மோகன்.

''மோகன். உன்ர அம்மாவின்ர வயித்தில உன்னக் கட்டத் தெரிந்த இந்த பெரியமனுசனுக்கு அவளின்ர கழுத்தில தாலியை கட்டத்தெரியயில்லை.''

''மிஸ்ரர் வரதன்... பிளீஸ் இங்கயிருந்து போயிடுங்க பிறகு இங்க கொலையே விழுந்திடும்...'' கத்தினான் மோகன்.

''தம்பி.... உன்ர அம்மாவின்ர வாழ்க்கையோட இப்பிடி விளையாடினதுக்கு என்ன பிராயச்சித்தம் செய்யவேணுமோ செய்யுறன்... ஆனா என்ர மகளின்ர வாழ்க்கையை காப்பாத்தடா..'' என்றவாறு வதனி மோகனின் காலில் விழுந்தாள்.

''மாமி.... என்ர உடம்பில ஓடுறது ஒரு அயோக் கியன்ர ரத்தம்தான்... ஆனா நான் உருவானது அம்மாவின்ர கருவில வளந்தது அவளின்ர அரவணைப் பில... இவ்வளவு கொடுமைகளை தனக்கு உங்கட குடும்பம் செய்தபிறகும் உங்கட மகளை தனக்கு மருமக ளாக்க நினைச்ச அவளது ஆசைக்கு நான் குறுக்க நிற்க மாட்டன்...'' என்றவன் ரஞ்சினியை நிமிர்ந்து பார்த் தான்.

''அன்ரி என்னை மன்னிச்சிடுங்க...'' என்று கேட் பது போலிருந்தது அந்தப்பார்வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு தசாப்தத்திற்கு மேலாக 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய ரஜனி குஹநாதனின் இயற்பெயர் - சபாபதி சுப்பையா குஹநாதன்.

செய்திகளை மட்டுமே பத்திரிகையாளனால் எழுத முடியும் என்பதற்கு விதிவிலக்காக சிருஷ்டி இலக்கியங்களையும் பத்திரிகையாளனால் எழுதமுடியும் என்பதற்கு இவரும் ஓர் உதாரணர்.

'ரஜனி' மாத நாவல் வெளியீட்டை ஆரம்பித்து - வெற்றிகரமாக நடத்தி எட்டு நாவல்களை வாசகர்களுக்கு தந்து, அதன் மூலமே 'ரஜனி' குஹநாதன் என்று இலக்கிய உலகில் பெயர் பதித்தவர்.

இவரது முதலாவது படைப்பான 'தவறுகள்' குறு நாவலே இப்போது நூலுருப்பெறுகிறது. ஈழத்தின் முன்னணி சிறுகதை எழுத்தாளராக திகழ்ந்த காலஞ் சென்ற காவலூர் எஸ். ஜெகநாதனின் சகோதரரான இவர் ஈழத்தின் காவல் ஊர் என்று பெயர்பெற்ற ஊர் காவற்றுறையின் கரம்பொன் கிராமத்தைச் சேர்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org